*03-03-2017*

1. *"Project 75"* வரிசையைச் சேர்ந்த நீர்மூழ்கி கப்பல் "INS Kalvari" நீருக்கடியிலானா ஏவுகணையை செலுத்தி வெற்றிகரமாக இலக்கை அடைந்துள்ளது.

2. *ஹரியானா* மாநிலத்தில் விண்வெளி வீரங்கனை "கல்பனா சாவ்லா" மற்றும் "தீன் தயாள் உபத்யா" பெயரில் இரண்டு மருத்துவ நிறுவனங்களை நிறுவ உள்ளதாக அம்மாநில முதல்வர் "மனோகர் லால்" அறிவித்துள்ளார்

3 *டெல்லி மாநில* அரசு பெண்களுக்கு வழங்கப்படும் "மத்திய உணவு"(Mid day meals) திட்டத்தை 12ம் வகுப்பு வரை உயர்த்தியுள்ளது

4. நாட்டில் புலம் பெயர்ந்து வருபவர்களை(Migrants) பற்றி ஆராயவும்,அவர்களுக்கு சட்டரீதியான கொள்கைகளை வகுக்கவும் அமைக்கப்பட்ட *"Partha Muhopadhay"* தலைமையிலான குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது

5. *தமிழ்நாடு* கைவினைத்தொழில் மேம்பாட்டு கழகம்(பூம்புகார்), *ஹைதராபாத்தில்* உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்துடன்(NIFT) தற்கால வடிவமைப்புகளை உருவாக்க இணைந்து செயல்பட உள்ளது

6. *ஆந்திர மாநிலத்தில்* "Kondaveetivagu flood water pumping" திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

7. ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர் "G Poornachandran" மனு ஜோசப் எழுதிய *"Serious men"* நாவலை தமிழில் " பொறுப்புமிக்க மனிதர்கள்" என்ற பெயரில் மொழிப்பெயர்த்ததை அடுத்து அவருக்கு சாகித்ய அகாதமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது

8.2017ம் ஆண்டிற்கான *"Harvard Humanitarian"* விருது பாடகி "Rihanna"விற்கு வழங்கப்பட்டுள்ளது

9. *YOUTUBE TV* அமெரிக்க சந்தையில் (US Market) அறிமுகப்படுத்தப்பட உள்ளது

10.பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே *"தூய்மை இந்தியா"* திட்டத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த "Swachhta Pakhwada" நிகழ்ச்சியை மார்ச் 1 முதல் மார்ச் 15 வரை "மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்" நடத்த உள்ளது

11.நாட்டிலே முதன்முறையாக *மத்தியபிரதேசமாநிலம் விடிஷா* மக்களவை தொகுதியில் உள்ள தலைமை தபால் நிலையத்தில் கடவுச் சீட்டுமையம் துவங்கப்பட்டுள்ளது 12.2017ம் ஆண்டிற்கான பல்கலைக்கழகங்களுக்கான *"Annual Visitors Award"* டெல்லியில் உள்ள "ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு"(JNU) வழங்கப்பட்டுள்ளது

13.2016ம் ஆண்டிற்கான *"Raksha Mantri's trophy"* சிறந்த மருத்துவ பங்களிப்பை வழங்கிய "Armed forces medical service"க்கு வழங்கப்பட்டுள்ளது

*04.03.2017* *(உலக வனஉயிரிகள் தினம)*

1. *ஹமாரி தாரோஹர்* திட்டம்(Hamari Dharohar Scheme) - மத்திய சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தினால் துவக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் நோக்கம் சிறுபான்மையின மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை பாதுகாப்பதாகும்

2.இந்த ஆண்டிற்கான *ஆந்திர அரசின் நந்தி விருது* *எட்டோவெள்ளிப்போயிந்தி மனசு படத்தில் சையமைத்த இளையராஜாவுக்கு சிறந்த இசையமைப்பாளர்* விருது வழங்கப்பட்டுள்ளது. அதில் நடித்த *நானிக்கு சிறந்த நடிகர்* விருதும் வழங்கப்பட்டுள்ளது. ஈகா சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. *1964-ல் இருந்து ஆந்திர அரசால் நந்தி விருது* வழங்கப்பட்டு வருகிறது.

3. *"Deendayal Rasoi Yojana"* *மத்திய பிரதேச மாநிலம்* நகர்ப்புற பகுதிகளில் உள்ள *ஏழை மக்களுக்கு மானிய விலையில் உணவு* வழங்கும் திட்டம் - மேலும் 2017ம் ஆண்டில் தீன் தயாள் உபத்தியாவின் நூற்றாண்டு விழாவையொட்டி இந்த ஆண்டை *"Garib kalyan varsh"* ஆண்டாக அனுசரிக்க அம்மாநிலம் முடிவெடுத்துள்ளது

4. *டெங்கு நோயை* தாக்கும் புதிய வகை பாக்டீரியாவான *உல்ஃபாசியா எனும் பாக்டீரியாவை* *இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும் & ஆஸ்திரேலியாவின் மோனாஸ்* பல்கலைக்கழகம் இணைந்து கண்டுபிடிந்துள்ளனர்

5.பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில் முதன்முறையாக *நமாமிபிரம்மபுத்திரா* எனும் பெயரில் *அசாம்* மாநிலம் ஆற்றுத்திருவிழாவை நடத்தியுள்ளது.

6. *ஹமாரி தாரோஹர் திட்டம்* = சிறுபான்மையின் மக்களின் கலாச்சாரம்& பண்பாட்டை பாதுகாக்க மத்திய சிறுபான்மையினர் அமைச்சகத்தால் கொண்டுவரப்பட்ட திட்டம்

7. *மீனா ஹேமச்சந்திரா குழு* ரிசர்வ் வங்கியினால் அமைக்கப்பட்டுள்ள, சைபர் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட குழு

8.அடுத்த ஐந்து வருடங்களுக்கு இந்திய புலிகள் காப்பகங்களில் புகைப்படம் & வீடியோ எடுக்க பிபிசி தொலைக்காட்சி நிறுவனத்திற்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் தடை விதித்துள்ளது

9. *Foal Eagle* *தென் கொரியாவும் அமெரிக்காவும்* இணைந்து நடத்தும் கூட்டு ராணுவ பயிற்ச்சி

10.மத்திய குடிநீர் மற்றும் கழிவுநீர்மேலாண்மை வாரியம் நீரின் தூய்மைக்கான *Swachh Shakti Saptah* விழிப்புணர்வு முகாமினை ஹரியானா மாநிலம் குருகிராமில் அமைச்சர் நரேந்திர சிங் தாமோர் துவங்கி வைத்துள்ளார்.

11.2017ம் ஆண்டிற்கான ஆசியன் தடகள போட்டிகள் *ஜார்கன்ட் மாநிலம் ராஞ்சியில்* வரும் ஜூன் மாதம் 1-முதல் 4ம் தேதி வரை நடக்க உள்ளது

12. *சென்னை விமான நிலையத்தில்* பயணிகள் -அதிகாரிகள் இடையே மார்ச் 1 முதல் 7 வரை *"புன்னகை வார விழா"* கொண்டாடப்பட உள்ளது.

13.நாட்டின் புவிசார் குறியீடு உரிமம் போன்ற வழக்குகளை விசாரிக்கும்,சென்னையில் உள்ள அறிவு சார் சொத்துரிமை மேல்முறையீட்டு வாரீயம் http/www.ipabindia.org என்ற புதிய இணையதள பக்கம் மற்றும் *'IPAB'* என்ற மொபைல் அப்ளிகேசன் துவங்கியுள்ளது.

14.ஐ.நா வின் அகதிகள் அமைப்பின் (United Nations High Commissioner for Refugees *(UNHCR))* நல்லெண்ண தூதராக புகழ்பெற்ற எழுத்தாளர் *நீல் ஹைமான்* நியமிக்கப்பட்டுள்ளார்.

15.டெல்லி மெட்ரோ அதன் கட்டுமான பணியில் ஒரு மாதத்தில் சுமார் 200 தூலங்களை அமைத்து சாதனை படைத்துள்ளது. இதன் மூலம் டெல்லி மெட்ரோ *லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்-ல் இடம் பெற்றுள்ளது*

*05,06.03.2017*

1.நாட்டின் மிக உயரமான தேசிய கொடி! *பஞ்சாப்* மாநிலம் அமிர்தசரஸில் *இந்தியாவின் மிக உயரமான தேசிய கொடி* அட்டாரி எல்லையில் பறக்க விடப்பட்டுள்ளது. நாட்டின் மிக உயரமான இந்த தேசிய கொடியின் உயரம் *360* அடி ஆகும். மேலும் கொடியின் நீளம் 120 அடி என தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

2.5ஜி தொழில்நுட்பத்தை *ஹுவாய்* நிறுவனம் இந்தியாவில் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. 5ஜி தொழில் நுட்பத்தின் அங்கம் = MIMO ( Multiple In Multiple Out. ).

3. *1000 சிசுக்களுக்கு எத்தனை சிசுக்கள் இறக்கின்றனர் எனக் கணக்கிடப்படும் IMR* அறிக்கையில் கேரளா மாநிலத்தின் ஐஎம்ஆர் அறிக்கை *6ஆக* குறைந்துள்ளது .. (தமிழகம் :21)

4.சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக கல்கத்தவைச்சேர்ந்த *இந்திரா பானர்ஜி* விரைவில் நியமிக்கப்பட உள்ளார்.

5.17வயதிற்கு உட்பட்ட *பிபா* உலககோப்பை கால்பந்து போட்டிகள் இந்தியாவில் நடைபெற உள்ளது.

6.ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தின் இரண்டாவது தலைநகரமாக *"தரம்சாலா"* (Dharamshala) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது

7.திருப்பதி விமான நிலையத்திற்கு *"ஸ்ரீ வெங்கடேஷ்வரா விமான நிலையம்"* என பெயர் மாற்றம் செய்ய ஆந்திர மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

8.சுவஸ்ட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த "Elias Ambuhi" பின்னோக்கி சறுக்கி விளையாடும்(Skiing backwards) பனிச்சறுக்கு போட்டியில் அதிக வேகத்தில் சறுக்கி உலகச் சாதனைப்படுத்தியுள்ளார்.

9. ராவி நதிக்கரையில் கட்டப்பட்டு வரும் *"Shalpur Kandi* அணை திட்டத்திற்காக" பஞ்சாப் மற்றும் ஜம்மு & காஷ்மீர் இடையே புதிய ஒப்பந்தர் கையெழுத்தாகியுள்ளது.

10.அருணாச்சல மாநிலத்தின் முதல் இராணுவம் அல்லாத அரசாங்க உதவிகளுக்கு பயன்படும் "Civilain airport" தேஜீ(TEZU) பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

11. *அருணாச்சல* பிரதேச மாநிலத்தில் கட்டப்பட்டு வந்த *"Dhola-Sadiya ghat"* பாலம் பயன்பாட்டிற்கு வர தயார் நிலையில் உள்ளது

- இப்பாலம் *"லோயிட்"* (Lohit) ஆற்றின்டையே கட்டப்பட்டுள்ளது

- இதுவே *இந்தியாவின் நீளமான பாலமாக இருக்க உள்ளது.*

12. *இணைய வசதியை பெறும் உரிமை கேரள மாநிலத்தில் தற்போது "குடிமக்களின் உரிமையாக"(Citizen's right) அறிவிக்கப்பட்டுள்ளது*.

13.மஹாராஷ்ட்ரா மாநிலம் பூனேவில் அமைய உள்ள புதிய விமான நிலையத்தை மேம்படுத்தவும் அதனை பற்றி அறிக்கை சமர்பிர்க்கவும் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த "Dorsch" நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது

- மேலும் இவ்விமான நிலையத்திற்கு *"சத்ரபதி சம்போஜி ராஜே"*(Chhatrapati Sambhaji Raje) பெயர் சூட்டப்பட்டுள்ளது

14.மேற்கு வங்க மாநில சட்டப்பேரவை " மருத்துவசார் நிறுவனங்கள் நிறுவதல் தொடர்பான ஒழுங்குமுறை"{Clinical Establishments (Registration, Regulation and Transparency) Bill} மசோதாவை கொண்டு வந்துள்ளது

15.மத்திய சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் அமைச்சகத்தின் "வனவிலங்குகள் குற்ற தடுப்பு பிரிவுவாரியம்"(Wildlife Crime Control Bureau-WCCB) சட்டத்திற்கு புரம்பாக விலங்குகள் வர்த்தகத்தை எதிர்த்து " Operation Thundee bird மற்றும் Operation Save Kurma" என்ற நிகழ்ச்சியை தொடங்கியுள்ளது

- இதனை INTERPOL உடன் இணைந்து செயல்படுத்த உள்ளது

16. *"Destination North East 2017"* மாநாடு *சண்டிகரில்* நடைபெற உள்ளது - வடகிழக்கு மாநிலங்களின் வர்த்தக முதலீட்டு தகுதியை எடுத்துக்காட்டும் விதமாக இம்மாநாடு நடைபெற உள்ளது

17.மத்திய அரசு முதன் முறையாக கங்கை நதி கணக்கெடுப்பை மேற்கொள்ள உள்ளது - இக்கணக்கெடுப்பில் நீர்வாழ் உயிரிகளின் வாழ்நாள் மற்றும் அருகிவரும் கங்கை நதி டால்பின் ஆகியவை கணக்கிடப்பட உள்ளன - மேலும் இவ்வாய்வு கங்கை நதி நீரின் தரத்தை நிர்ணயிக்க இவ்வாய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது

18.நாட்டின் மிகப்பெரிய மூவர்ண கொடி(Tri colour) பஞ்சாப் மாநிலம் அட்டாரியில் அமைக்கப்பட்டுள்ளது.

19. *"Swachh Shakthi Saptah 2017" மாநாடு குஜராத் மாநிலம்* காந்திநகரில் நடந்து முடிந்துள்ளது

20. *மேற்கு வங்க மாநில அரசு "குருக்"* (Kurukh) மொழிக்கு அதிகாரப்பூர்வ அந்தஸ்து(Official status) வழங்கியுள்ளது

- இம்மொழி அருகிவரும்(Endangered) மொழிகள் பட்டியலில் ஏற்கனவே UNESCOஆல் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கத.

21. *முற்றிலும் மகளிரால்* இயங்கும் காவல்நிலையம் நாட்டில் *முதன்முறையாக ராஜஸ்தான்* மாநிலம் ஜெய்ப்பூரில் அமையஉள்ளது.

*மார்ச்8 பெண்கள்தினத்தன்று* இந்நிலையம் திறப்புநிகழ்ச்சி நடக்க உள்ளது

22. *ஏடிபி மெக்சிககன் ஒபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்க டென்னிஸ் வீரர் சாம் கெர்ரி* , ரபேல் நடாலை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் .

23.2016ம் ஆண்டு சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது, சீரியன் மென் என்ற மனு ஜோசஃப் எழுதிய ஆங்கில நாவலை தமிழில் பொறுப்புமிக்க மனிதர்கள் என்ற பெயரில் மொழியாக்கம் செய்ததற்காக எழுத்தாளர் பூர்ணசந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

24.மும்பையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மனித உடலில் உள்ள *விந்துசெல்லில் #HSP90* [ Heat Shock Protein 90 ] என்ற புதுவகை புரத வகையினை கண்டறிந்துள்ளனர்

25.மேற்குவங்களாத்தில் பேசப்படும் க்ருக் மொழியினை பாதுகாக்கப்பட்ட மொழிப் பட்டியலில் யுனஸ்கோ சேர்த்துள்ளது

26. *அசாம*் மாநில அரசு 8ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சமஸ்கிருத மொழியினை படிக்க கட்டாயமாக்கியுள்ளது

27.தேசிய அளவிளான *Jal Kranti Abhiyan* கூட்டத்தொடர் டெல்லியில் நடைபெற்றது.

28.சிறை கைதிகளின் அனுபவத்தை 500ரூ செலுத்தி சாதாரண மக்களும் பெறும் சிறை சுற்றுலா திட்டத்தை *மஹாராஷ்டிர சிறைத் துறை* துவக்கியுள்ளது முதற்கட்டமாக தானே, *ரத்னகிரி மற்றும் சாவந்த்வாடி* சிறைகளில் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது. முன்னதாக தெலுங்கானாவில் உள்ள சாங்காரெட்டி சிறை சிறைசுற்றுலா திட்டத்தை அறிமுகபடுத்தியுள்ளது.

29.*தெலுங்கானா மாநிலத்தை முற்றிலும் டிஜிட்டல் மாநிலமாக மாற்ற அம்மாநிலம் கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது*

30. *உலகில் முதன்முறையாக cyber crime university course னை ஆஸ்திரேலியா நாடு அறிமுகப்படுத்தியுள்ளது.*

31. *உஜ்வான் என்ற சிறு குறு நிதி நிறுவனம்*Paison Ki ABCD என்ற குறும்படத்தை தயாரித்துள்ளது..

நிதி மற்று கல்வியறிவு & பொருளாதாரா கல்வியறிவு சார்ந்த குறும்படமாகும்.

32. *Most Popular Tourism Destination விருதினை இலங்கை நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது*

33. *13-வது Economic Cooperation Organisation* மாநாடு இஸ்லாமாபாத்தில் நடக்க உள்ளது.

07,08,03.2017

1."Financial Times"ன் சமீபத்திய அறிக்கையின்படி சீனாவின் வங்கி அமைப்பு சொத்துக்களின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய வங்கி அமைப்பாக உள்ளது

2.ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் முதல் பொலிவுறு பழங்குடியினர் கிராமம்(Smart Tribal Village)- "Habbi"

"Great Backyard Bird Count"(GBBC-2017) அறிக்கையின்படி இந்தியாவில் உள்ள மொத்த பறவை இனங்களில் 45% இமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது - இந்தியாவில் உள்ள 1263 இனங்களில் 564 பறவை இனங்கள் இம்மாசலப்பிரதேசத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.NASAவின் "HUbble Space Telescope" மிகப்பெரிய அண்டம்(Galaxy) ஒன்றை கண்டறிந்துள்ளது

- இதற்கு "UGC12591" எனப் பெயரிடப்பட்டுள்ளது

- இந்த அண்டம் பூமியிலிருந்து 400மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது

4.இந்தியாவின் முதல் ஆயுள் காப்பீட்டு chatbot ரோபோட் "HDFC LIFE" நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது

- ஆயுள் காப்பீடு(Life Insurance) தொடர்பான வாடிக்கையாளர்களின் சந்தேகங்களை தீர்க்க இவை உதவும்

- இதனை "Haptik" என்ற chatbot நிறுவனத்துடன் இணைந்து தொடங்கியுள்ளது

5.முதலாவது இந்திய பெருங்கடல் ரிம் அசோசியேசன் நாட்டு அமைச்சர்களின் மாநாடு(Indian Ocean RIM Association Summit) இந்தோனேஷியா தலைநகரம் ஜஹர்டாவில் நடைபெற்றது

- இம்மாநாட்டின் கரு "Strengthening Maritime Cooperation for a Peaceful, Stable and Prosperous Indian Ocean"

- IORA(Indian Ocean RIM Association) தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆனதையொட்டி அதை கொண்டாடும் வகையில் இம்மாநாடு நடைபெற்றது

- IORA தொடங்கப்பட்ட ஆண்டு-1997

ஓலா நிறுவனம் மத்தியப் பிரதேசம் மாநிலதுடன் திறன் மேம்பாட்டு இயக்கம் மூலம் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்திட்டுள்ளது.

6.இந்தியா-ஓமன் இராணுவப் பயிற்சி 'Al-Nagah-II "ஹிமாச்சல தொ◌ாடங்கியது

7.இந்தியா மற்றும் நேபால் "சூர்யா கிரான்-XI எனும் கூட்டு இராணுவ பயிற்சியை உத்தரகண்ட் பித்தே◌ாராகர் பகுதியில் தொ◌ாடங்கியுள்ளது.

8.கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுக்கும் நோக்கில் “ Smart Mosquito Density System” எனும் திட்டம் அறிமுகம் செய்துள்ள மாநிலம் = ஆந்திரப் பிரதேசம்

9.தேசிய பாதுகாப்பு வாரம் = மார்ச் 4 முதல் 7 வரை நடைபெற்றது .

இவ்வாண்டு நோக்கம் "ஒருவரையொருவர் பாதுகாப்பாய் வைத்திருப்போம்".

10.மலைவாழ் மக்கள் பேசும் மொழியான "குருக் மொழி" க்கு அலுவலக மொழி அந்தஸ்து வழங்கியுள்ள மாநிலம் = மேற்கு வங்கம் ( குருக் மொழி ஒரு வடதிராவிட மொழியாகும் ).

11.கர்நாடகாவில் ஷிமோகா மாநக ராட்சியின் மேயராக மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியை சேர்ந்த தமிழர் ஏழுமலை என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

12.உலகின் "சிறந்த நாடுகளில்" சுவிச்சர்லாந்து இரண்டாவது ஆண்டகா முதல் இடம் பிடித்துள்ளது.

"சிறந்த நாடுகள்" U.S. நியூஸ் அண்ட் வேர்ல்ட் ரிப்பே◌ார்ட், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் Wharton School மற்றும் உலக பிராண்ட் நிபுணர்கள் BAV ஆலே◌ாசனை இருந்து வரிசை படி, மேல் நாட்டின் மரியாதைகள் எடுக்கும். வெறும் சுவிஸ் பின்னால் கனடா மற்றும் பிரிட்டன், முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது, உள்ளன.

13.Al-Nagah-II 2017= இந்தியா மற்றும் ஓமன் இணைந்து நடத்தும் கூட்டுராணுவப்பயிற்ச்சி

ஹிமாச்சல பிரதேசத்தில் துவக்கம்.

14.ஆஸ்திரேலியாவில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருது Sarbjit திரைப்படத்தில் நடித்த ஐஸ்வர்யாராய் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

15.2017 மூர்த்தி தேவி விருது =மலையாள மொழி எழுத்தர் எம்.பி வீரேந்திர குமார்.

16.A Piece of Tenth Lok Sabha என்ற புத்தகத்தின் ஆசிரியர்= யம்நம் யய்மா சிங்,( மணிப்பூர் அரசியல்வாதி ).

17.2017ம் ஆண்டிற்கான இந்தியன் மொபைல் வேர்ல்டு காங்கிரஸ் மாநாடு டெல்லியில் வரும் செப்டம்பர் 27அனன்று நடைபெறவுள்ளது.

18.#விடைபெறுகிறது_ஐஎன்எஸ்விராட்

இந்தியாவின் இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பல் ஐஎன்எஸ் விராட் இன்றுடன் விடைபெறுகிறது

ஐஎன்எஸ் விராட் போர்க்கப்பலை பிரிட்டன்தான் கட்டியது.

1959ல்- பிரிட்டன் கடற்படையில், ஹெச்.எம். எஸ். ஹெர்மஸ் என்ற பெயருடன் இந்தக் கப்பல் இணைந்தது.

1984ம் ஆண்டு பிரிட்டன் கடற்படை ஹெர்மஸ் கப்பலுக்கு ஓய்வளித்தது. அந்தக் கப்பலை பழுதுபார்த்து இந்தியா வாங்கியது. ஐ.என்.எஸ். விராட் என பெயர் சூட்டப்பட்டு1987ம் ஆண்டு மே 12ம் தேதி, இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.

இந்திய கடற்படையில் பணியாற்றி ஓய்வு பெறும் கடைசி பிரிட்டன் தயாரிப்பு கப்பல் இதுவே

உலகின் மிகப் பழமையான விமான தாங்கிக் கப்பல் என்ற வகையிலும் கடற்படையில் நீண்ட காலம் சேவை புரிந்த கப்பல் என்ற வகையிலும் ஐ.என்.எஸ். விராட் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற உள்ளது

இந்த கப்பலை வாங்கி மியூசியமாக மாற்ற ஆந்திர அரசு முயற்சித்துள்ளது

ஐஎஸ்எஸ் விராட்டின் செல்லப் பெயர் = Grand old lady

நடப்பு நிகழ்வுகள் 09.03.2017*

1.சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாட்னா-பக்சார் முதல் பயணிகளை *இயக்கிய பெண் ரயில் ஓட்டுனர் = டிக்கிகுமார்.*

2.பெண்களால் உருவாக்கப்பட்ட மற்றும் பெண்களால் நடத்தப்படும் start up நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் பேஸ்புக் நிறுவனம் *SheLeadsTech* என்ற புதிய நிகழ்ச்சியை தொடங்கியுள்ளது.

3.வடகிழக்கு மாநிலமான *"திரிபுரா"* விலிருந்து மேலும் 60MW மின்சாரத்தை பங்களாதேஷ்க்கு வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

4. *மஹாராஷ்ட்ரா* மாநில அரசு டாக்ஸி சேவைகளை இணைய வழியில் கொண்டுவர *மஹாராஷ்ட்ரா* நகர டாக்ஸி கட்டுப்பாட்டு விதிகளில் மேம்பாடு செய்ய உள்ளது.

5."Financial Times"ன் சமீபத்திய அறிக்கையின்படி சீனாவின் வங்கி அமைப்பு சொத்துக்களின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய வங்கி அமைப்பாக உள்ளது

6. *ஜம்மு & காஷ்மீர்* மாநிலத்தின் முதல் பொலிவுறு பழங்குடியினர் கிராமம்(Smart Tribal Village)- *"Habbi"*

7. *"Financial Times"* ன் சமீபத்திய அறிக்கையின்படி சீனாவின் வங்கி அமைப்பு சொத்துக்களின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய வங்கி அமைப்பாக உள்ளது

8. *"Great Backyard Bird Count"(GBBC-2017)* அறிக்கையின்படி இந்தியாவில் உள்ள மொத்த பறவை இனங்களில் 45% இமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

- இந்தியாவில் உள்ள 1263 இனங்களில் 564 பறவை இனங்கள் இம்மாசலப்பிரதேசத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.NASAவின் "HUbble Space Telescope" மிகப்பெரிய அண்டம்(Galaxy) ஒன்றை கண்டறிந்துள்ளது

- இதற்கு *"UGC12591"* எனப் பெயரிடப்பட்டுள்ளது

- இந்த அண்டம் பூமியிலிருந்து 400மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது.

*நடப்பு நிகழ்வுகள்* *09,10.03.2017*

1.எதிரி சொத்து சட்டம் நிறைவேற்றம்

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கு குடிபெயர்ந்தவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் மீது உரிமை கோருவதற்கு எதிராக எதிரி சொத்து சட்டம் கடந்த *1968*ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

குரல் வாக்கெடுப்பு மூலம் எதிரி சொத்து சட்டம் நிறைவேற்றப்பட்டது.

2. *சச்சின் டெண்டுல்கர்* ஐசிசி மகளிர் உலக கோப்பைக்காண (2017) தூதராக நியமிக்கப்பட்டார்

3.இரண்டு நாள் வட-கிழக்கு வணிக உச்சி மாநாடு (NEBS) புது தில்லி தொடங்குகியது.

4.மகளீர் பாதுகாப்பிற்காக அம்மாவின்அறன் என்ற பெயரில் மொபைல் செயலியை தமிழகம் அறிமுகப்படுத்தியுள்ளது

5.யுரோப் யூனியனின் தலைவராக இரண்டாவது முறையாக டொனால்டு டஸ்க் நியமனம்

6.2017 IEEE அலைக்கற்றை தொழில் நுட்ப விருதினை ஐஐடி சென்னை வென்றுள்து

7.சிறப்பு குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் ஆஸ்திரியாவில் மார்ச் மாதம் துவங்க உள்ளது.

8.BCCI சார்பில் விருதுகள் வழங்கும் விழா பெங்களூரில் நடைபெற்றது.

*இதில் விராட் கோலிக்கு *"பாலி உம்ரிகர்"* விருதும், *அஸ்வினுக்கு "சி.கே.நாயுடு" விருதும் வழங்கப்பட்டது.*

*இதில் பாலி உம்ரிகர் விருதை  *3-வது* முறையாக பெறும் முதல் இந்திய வீரர் விராட் கோலி.

9.மன உளைச்சலுக்கு ஆளான பெண்களுக்கென *ஒடிஷா மாநிலம் 181* எனும் உதவி எண்ணை தொடங்கியுள்ளது.

10. *'India by the nile'* எனும் கலாச்சாரத் திருவிழா எகிப்தில் தொடங்கியது.

11.கொங்கனி எழுத்தாளர் *மஹாபலேஷ்வர் செயில் என்பவருக்கு 2016-ஆம் ஆண்டின் சரஸ்வதி சம்மன் விருது* வழங்கப்பட்டது.

12. *INS Tillanchang* எனும் கப்பலை துணை கடற்படைத் தளபதி கிரிஸ் லுத்ரா, கர்வார்(கர்நாடகா) எனுமிடத்தில் இந்திய கப்பற்படைக்கு அரப்பணித்தார்

13. *ஹிமாச்சல் பிரதேசம்* மாநில அரசு வேலை தேடுவோர்க்கென *MeraHunar HP* எனும் மொபைல் அப்ளிகேசனை அறிமுகம் செய்தது.

15.Enawo எனும் வலிமையான சூறாவளி மடகாஸ்கரின் வடகிழக்கு பகுதிகளை தாக்கியது.

16. *பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகம்* இந்தியாவில் முதன்முறையாக மரபணு மாற்றப்பட்ட 3 பருத்தி வகைகளை கண்டறிந்துள்ளது. அதற்கு *PAU Bt 1, F1861 & RS 2013* என பெயரிட்டுள்ளனர்

17. *Solar DC inverter system* கண்டறிந்ததற்காக IIT, Chennai-க்கு 2017 IEEE spectrum tech in the service of society விருது வழங்கப்பட்டது.

18. *ஹரியானா* மாநிலத்தின் பெண் குழந்தைகளின் விகிதம் 1000 ஆண் குழந்தைகளுக்கு 938 பெண் குழந்தைகள் உள்ளதாக அறிவித்தது.

19.ஜவுளித்துறை அமைச்சர் பெண் நெசவாளர்கள் மற்றும் பெண் கைவினைஞர்களுக்கு

*"கமலாதேவி Chattopadhya"* தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளது.

20.அஸ்வின், ஜடேஜா கூட்டாக ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலாம் இடத்தை பிடித்துள்ளனர்.

21.மத்திய பிரதேச மாநிலம் விதவைகளை ( widows ) என்ற வார்த்தைகளுக்கு பதிலாக இனி அவர்களை *கல்யாணி* என்ற வார்த்தையை பயன்படுத்த அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

13,14, நடப்பு நிகழ்வுகள்.

1.நீலப்புரட்சியை எட்டும் வகையில் ரூ.52,000 இலட்சம் செலவில் Mission fingerling எனும் திட்டத்தை இந்திய அரசு அறிமுகம் செய்தது.

2.பீஹார் மாநிலம் வைசாலியில் வாழை ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது.

3.மனோகர் பரிக்கர் கோவா மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றார்.

4.மணிப்பூரில் பி.ஜே.பி கட்சி வெற்றி பெற்றதை தொடர்ந்து பிரேன் சிங் அம்மாநில முதல்வராக பதவியேற்க உள்ளார். முன்னால் முதல்வர் இபோபி சிங் பதவி விலகினார்.

5.விஞ்ஞானிகள் உலகின் முதல் ஒளிரும் தவளை இனங்களை அர்ஜெண்டினாவில் கண்டறிந்தனர். மேலும் அவற்றிலுள்ள hyloin-L1, hyloin-L2 and hyloin-G1 எனும் மூன்று வகை மூலக்கூறுகளே அவை ஒளிரும் தன்மைக்கு காரணம் எனவும் கண்டறிந்தனர்.

6.மார்ச் 13-ல் காமென்வெல்த் தினம் கொண்டாடப்பட்டது.

7.தெலுங்கானா மாநில அரசு பிறக்கும் குழந்தைகளுக்கு பயனளிக்கக்கூடிய KCR kit எனும் வசதியை அறிமுகம் செய்தது.

8.தாய்லாந்து மார்ச் 13-ல் தேசிய யானைகள் தினத்தை கொண்டாடியது.

9.19 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தானில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கியுள்ளது

- கடைசியாக 1998ல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது

- பாகிஸ்தான் 6வது அதிக மக்கள்தொகை உள்ள நாடாகும்

10.2022ல் தென் ஆப்ரிக்கா டர்பனில்(Durban) நடைபெற இருந்த காமன்வெல்த் போட்டிகள் போதிய நிதியுதவி இல்லாத காரணத்தால் அங்கு நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது

11. “The Book of Indian Dogs” என்ற புத்தகத்தை எழுதியவர் "S. Theodore Baskaran"

12. புதிய வாழைப்பழ ஆராய்ச்சி மையத்தை பீகார் மாநிலம் வைசாலியில் மத்திய அரசு தொடங்கி வைத்துள்ளது

13."Mercer's 19th quality living survey"ன் படி ஆஸ்திரியாவின் தலைநகர் "வியன்னா" அதிக தரம் வாய்ந்த(higheat quality) நகரமாக 8வது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

- பாக்தாத் மோசமான நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

- இந்திய் நகரங்களில் "ஹைதரபாத்" முதலிடத்தில் உள்ளது

- இப்பட்டியலில் 230 நகரங்கள் இடம் பெற்றுள்ளன

14.மத்திய பிரதேச மாநிலத்தில் அமையவுள்ள "Rewa Solar Plant"ற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க உள்ளது

15.உலகின் முதல் ஒளிரும் தவளை அர்ஜென்டினாவில் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது

- சாதாரண ஒளியில் மஞ்சள்,சிவப்பு மற்றும் இளம்பச்சை நிறத்தில் ஒளிரும்

- நீலம் மற்றும் பச்சை நிறத்தில் இருளில் ஒளிரும்

16."The court of Arbitration for Sport" இரஷ்ய நாட்டின் முன்னாள் தடகள் மருத்துவ சம்மேளனத்தின்(Swimming) முன்னாள் தலைவர் "Sergei Portugalov" வாழ்நாள் தடை(lifetime ban) விதித்துள்ளது

- இரஷ்யா தடகள வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்த உதவியதற்காக இத்தடை விதிக்கப்பட்டுள்ளது

17.March-13 காமன்வெல்த் தினம்

- Theme 2017- "A Peace Building Commonwealth"

18.MISSION FINGERLING

- நீலப் புரட்சியை(Blue Reveloution) சாதிக்க மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகத்தால் கொண்டு வரப்பட்ட நிகழ்ச்சியாகும்

- மீன் வளர்ப்பில் முழுமையான வளர்ச்சி மற்றும் மேலாண்மையை ஊக்குவிக்க இந்நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது

- 2014-2015ம் ஆண்டில் மீன்பிடித்துறையின் உற்பத்தி 10.79metric megatone(mmt) ஆக உள்ளது இதை 2020-2021ம் ஆண்டிற்குள் 15mmt ஆக உயர்த்துவதே இந்நிகழ்ச்சியின் நோக்கம்.

19.MARCH 15- World Consumer Rights Day-WCRD (உலக நுகர்வோர் உரிமைகள் தினம்)

20.One India plus நிறுவனத்தின் புதிய தூதரக அமிதாப் பச்சன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

21.மார்ச் 25 ம் நாள் "இன படுகொலை" நாளாக வங்காளதேசம் அறிவித்துள்ளது.

22.கிராமங்களை மேம்படுத்த "Adarsh Gram Yojana for Rural Poor" எனும் திட்டத்தை அருணாச்சலபிரதேச அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

15,16 March நடப்பு நிகழ்வுகள்...

1) பாதுகாப்புத் துறை அமைச்சர் பதவியை மனோகர் பாரிக்கர் ராஜினாமா செய்ததை அடுத்து, அந்தப் பதவி, மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லியிடம் கூடுதலாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2) மும்பையின் முதல் மிதக்கும் ஓட்டலை பந்த்ரா- வொர்லி கடற்பகுதியை இணைக்கும் பாலத்தின் பின்னணியில் “ஏபி

செலிஸ்டியல்" என்கிற மிதக்கும் ஓட்டல் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மிதக்கும் ஓட்டலை மஹாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் திறந்து வைத்துள்ளார்.

3) கெவின் கேர் நிறுவனத்திலிருந்து பிரை வேட் ஈக்விட்டி நிறுவன மான சைரஸ்

கேபிடல் நிறுவனம் வெளியேறியுள்ளது.

4) March --15 உலக நுகர்வோர் தினம் (World Consumer's Rights day)

2017 Theme: "Building a Digital World Consumers Can Trust"....

5) குழந்தை திருட்டை தடுக்க சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் பயோ மெட்ரிக் முறை அறிமுகம்

6) நேத்ரா அமைப்பு -- ரயில் பயணத்தில் ஏற்படும் அசம்பாவிதங்களை தவிர்க்க.. அகச்சிவப்பு கதிர்,ரேடார் மூலம் இந்த அமைப்பு செயல்படும்

7) ரிசர்வ் வங்கியின் (RBI) புதிய துணை ஆளுநராக B.P. கனுங்கோ ( B.P. Kanungo ) நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவி காலம் 3 ஆண்டுகளாகும்.தற்போது துணை ஆளுநராக பதவி வகித்து வரும் R. காந்தி, ஏப்ரல் 03ல் ஓய்வு பெறுகிறார்....

8) MY STORY --- An Autobiography Written by Australian cricket player --- Micheal Clarke

9) NTPC -- National Thermal power corporation... இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்னாற்றல் உற்பத்தி நிலையத்தை கேரளாவின் காயம்குளம் பகுதியில் நிறுவி உள்ளது...

10) MARCH 16 -- தேசிய தடுப்பூசி தினம்

11) தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு (ம) வழங்கல் 1968 ம் ஆண்டு வழங்கப்பட்டது.

12) ரூ. 50 க்கு ATM card -- தபால் துறை அறிவிப்பு... சேமிப்பு கணக்குக்கு 4% வட்டி

13) கிரிடிட் கார்ட் சைஸில் ஈ.சி.ஜி மெசினை டெலி ஈ.சி.ஜி (ம) மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையம் அறிமுகப்படுத்தி உள்ளது.

14) ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட [ International Film Festival and Awards of Australia ] விழாவில் , SARBJIT படத்தில் நடித்த ஐஸ்வர்யாராய்க்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டுளளது.

15) The Wrong Turn : Love and Betrayal in the Time of Netaji என்ற புத்தகத்தை சஞ்சய் சோப்ரா & நமிதா ராய் கோஸ் ஆகியோர் எழுத்தியுள்ளனர்.

16) From Inside the Steel Frame : The Memoirs of an Administrator என்ற புத்தகத்தை அசோக் பாண்டே எழுதியுள்ளார்.

17) மனித உரிமைகளுக்கான ஐநா அமைப்பை உருவாக்குவதற்கு ஐநாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்த நாள் 16 மார்ச் 2006.

18) இந்திய விளையாட்டு ஆணையத்தின் (சாய்) நிர்வாக குழு உறுப்பினராக இந்தியாவின் முன்னணி பேட்மிண்டன் வீராங்கனை ஜூவாலா கட்டா நியமனம்.

19) ஜூன் 2017-ல் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் ICC பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் நல்லெண்ண தூதராக சச்சின் டெண்டுல்கரை சர்வதேச கிரிக்கெட் கமிட்டி நியமித்துள்ளது

20) சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான முதுமக்கள் தாழி, போடி அருகே துரைராஜபுரம் காலனி, மரக்காமலை மலை அடிவாரத்தி ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாழிகளில் அலைகள் போன்ற சின்னங்களும், நீ என்ற குறியீடும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

21) மாநில ஹாக்கி: இந்தியன் வங்கி சாம்பியன்

சென்னையில் நடைபெற்ற இந்தியன் வங்கி கோப்பைக்கான மாநில அளவிலான அழைப்பு ஹாக்கிப் போட்டியில் இந்தியன் வங்கி சாம்பியன் பட்டம் வென்றது.

17,18 நடப்பு நிகழ்வுகள்...

1) சியரா லியோன் நாட்டின் கிழக்கு பகுதியில் 706 காரட் வைரம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. உலகளவில் உள்ள பெரிய வைரங்களில் 10வது பெரிய வைரம் இது.சியரா லியோனில், வைரம் மிகுந்த கோனா பகுதியில், இந்த வைரத்தை இமானுவேல் மோமோக் என்பவர் தோண்டியெடுத்தார்.

அதிபர் எர்னஸ்ட் பய் கொரோமோ பார்வையிட்ட பின் வைரம் மத்திய வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

2) அமெரிக்க சுகாதார காப்பீட்டு ஆணையத்தின் தலைவராக இந்திய பெண் சீமா வர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

3) அமெரிக்காவில் நடைபெற்ற அறிவியல் திறமை போட்டியில் இந்திய வம்சாவளியை சேர்ந்த மாணவி இந்திராணி தாஸ் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதையும் சுமார் ரூ.1.65 கோடி மதிப்பிலான பரிசு தொகையும் பெற்றார்..

3) பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் உடலின் அசைவுகளை வைத்து இரத்த அழுத்தம் கண்டறிய ஒரு புதிய சென்சாரை உருவாக்கியுள்ளனர்

4) இந்திய-ரஷிய இருநாட்டு வர்த்தகத்தை ரூ.2 லட்சம் கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

5) டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குநராக வெள்ளையன் சுப்பையா நியமிக்கப்பட்டுள்ளார்.

6) ஹரியானா மாநில அரசு, 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் புனித யாத்திரை செல்வதற்கு ஏதுவாக தீர்த்த தரிசன யாத்திரை எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

7) குஜராத்தில் நர்மதை ஆற்றின் குறுக்கே, பருச் (Bharuch) மற்றும் அங்கிலேஷ்வர் (Ankleshwar) நகரை இணைக்கும் வகையில் 1344 மீட்டர் நீளமுள்ள ஆசியாவின் மிக நீளமான கம்பி வட பாலத்தை [Cable Bridge] பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார்.

8) பஞ்சாபின் 26வது முதல்வராக காங்கிரஸ் கட்சியின் கேப்டன் அம்ரிந்தர் சிங் பதவியேற்றுக்கொண்டார்.

9) ஒவ்வொரு ஆண்டும் உலக தூக்க தினம் மார்ச் மாதத்தில் வரும் மூன்றாவது வெள்ளிக்கிழமை (மார்ச் 17)கடைப்பிடிக்கப்படுகிறது

10) 2017-- National Theatre

Festival -- திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ளது...

11) "So You Want to Know About the Environment" எனும் நூலின்ஆசிரியர் -- பிஜால் வச்சரஜனி. ...

12) 'When Breath Becomes Air' என்ற நூலின் ஆசிரியர் -- பால் கலாநிதி

13) Women in Politics Map 2017 எனும் பட்டியலில் இந்தியா 148

வது இடத்தில் உள்ளது....

14) “Indica: A Deep Natural History of the Indian Subcontinent” எனும் புத்தகத்தின் ஆசிரியர் --- Pranay Lal

15) 1965ஆம் ஆண்டு மார்ச் 18-ஆம் தேதி சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி லியோனொவ் வஸ்கோத், 2 விண்கலத்தில் சென்று விண்வெளியில் 12 நிமிடங்கள் நடமாடிய முதல் மனிதர் ஆவார்.

16) அ.தி.மு.க. சார்பில் “அம்மாவின் அரண்” என்ற அலைபேசி செயலி வெளியிடப்பட்டுள்ளது.பெண்களுக்கென பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் இந்த செயலியில் இடம்பெற்றுள்ளது...

17) SAI -- Sports Authority Of India

18) ஆந்திர மாநிலம் , விஜயவாடாவில் அமைந்துள்ள ஞானவரம் விமான நிலையத்தை – நந்தமூரி தாரக ராமாராவ் – அமராவதி விமான நிலையம் எனவும்,திருப்பதி விமான நிலையத்தை – ஸ்ரீ வெங்கடேஸ்வரா விமான நிலையம் என பெயர் மாற்றம் செய்ய ஆந்திர மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

19) மணிப்பூர் மாநில முதல்வராக பிரேன் சிங் கடந்த மார்ச் 16-ஆம் தேதி பதவியேற்றுக்கொண்டார். துணை முதல்வராக ஜாய் குமாரும் மற்றும் 7 அமைச்சர்கள் பதவியேற்றுக்கொண்டனர்ஆளுநர் நஜ்மா ஹெப்துல்லா இவர்களுக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதி பிரமாணமும் செய்து வைத்தார்.

20) கோல்டா மெயர் -- இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரான நாள் 17 மார்ச் 1969.

19,20 MARCH நடப்பு நிகழ்வுகள்

1) வயது முதிர்ந்த மூத்த குடிமக்கள் தங்கள், அன்றாட கடமைகளை நிறைவேற்ற உதவி புரியும் வகையிலான CHINTU என பெயரிடப்பட்ட இயந்திர மனிதனை,புனேவை சேர்ந்த Maharashtra Institute of Technology (MIT), IBM நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளனர்.

2.பீகாரின் ராஜ்கிர் நகரில் ( நாளந்தா மாவட்டம் ) சர்வதேச புத்த மத மாநாடு மார்ச் 17 முதல் மார்ச் 19 வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டை புத்த மத தலைவர் தலாய் லாமா தொடங்கி வைத்தார்.

3) உலகின் 10வது பெரிய வைரம், சியரா லியோன் நாட்டின் கிழக்கே கோனா பகுதியில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. இது

706 காரட் மதிப்பு கொண்டது.இந்த வைரத்தை இமானுவேல் மோமோக் என்பவர் தோண்டியெடுத்து, அந்நாட்டு அரசிடம் ஒப்படைத்துள்ளார்.

4) ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மைக்கேல் கிளார்க் MY STORY என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

5) இணையதள வசதியை மனிதனின் அடிப்படை உரிமையாக்கிய முதல்மாநிலம் கேரளா

6) ஜப்பானில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் நடைப் போட்டியில் இந்திய வீரர் கே.டி.இர்ஃபான் வெண்கலப் பதக்கம் வென்றார்.

7) இந்திய குத்துச்சண்டை வீரர்களுக்கான பயிற்சியாளராக, சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் பயிற்சியாளர் குழு துணைத் தலைவரும், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவருமான சான்டியாகோ நீவா பொறுப்பேற்க உள்ளார்.

8) சர்வதேச கபடி இறுதிப் போட்டியில் இந்தியாவும் இங்கிலாந்தும் மோதின.மொரீஷியசில் நடந்த இறுதிப் போட்டியில் அந்தோணியம்மாள் தங்கப்பதக்கம் வென்றார். இவர் விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சோழபாண்டிபுரத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

9)குழந்தைகளுக்கு விமான தொழில்நுட்பத்தை கற்று தரும் சென்னையை சேர்ந்த டாக்டர் ஸ்ரீமதி கேசனுக்கும் சிங்கப்பூரில் தலைசிறந்த மகளிர் விருது வழங்கப்பட்டது.

இந்திய ராணுவத்தில் பல ஆண்டுகள் சேவையாற்றிய வந்தனா சர்மாவுக்கும் தலைசிறந்த மகளிர் விருது வழங்கி கவுரவம் அளிக்கப்பட்டது.

தலைசிறந்த மகளிர் விருது

ரேவதி சித்தார்தே ராய் என்பவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.இவர் 2007-ல் ஆசியாவின் முதல் மகளிர் டாக்ஸி சேவையை தொடங்கினார்.

10) நிலக்கரிக்கும் தரச் சான்று வழங்கும் நடைமுறை விரைவில் வர உள்ளது. நிலக்கரித்துறை கட்டுப்பாட்டாளர் அஞ்சனி குமார்...

11) டெல்லியில் நடைபெற்ற விஜய் ஹசாரே கோப்பை ஒருநாள் தொடர் இறுதிப் போட்டியில் பெங்கால் அணியை 37 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தமிழக அணி சாம்பியன் பட்டம் வென்றது.

12) உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய வீராங்கனை வித்யா பிள்ளை வெள்ளிப் பதக்கம் வென்றார்.

13)பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளராக ஐ.நா. சபையின் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றி வரும் தெமினா ஜன்ஜுவா நியமிக்கப்பட்டுள்ளார்.தெமினா ஜன்ஜுவா பாகிஸ்தானின் முதல் பெண் வெளியுறவு செயலாளர் ஆவார்.

14) காதுகளுக்கான அறுவை சிகிச்சையை ரோபோட்டை வைத்து செய்யும் முறையை சுவிட்சர்லாந்து நாட்டில் பெரின் பல்கலைகழகத்தை சேர்ந்த பேராசிரியர் Stefan Weber என்பவர் அறிமுகம் செய்துள்ளார்.

15) சர்வதேச மகிழ்ச்சி தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

16) ஒவ்வொரு ஆண்டும் உலக சிட்டுக்குருவிகள் தினம் மார்ச் 20ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது.

17) பிஹார் மாநிலத்தில் உள்ள நாளந்தா திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 97 வயதில் எம்ஏ படிக்கும் முதியவர் ராஜ்குமார் வைஷ்யா, நாட்டிலேயே மிக வயதான மாணவர் என்று லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

18) அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரின் பொதுப்பணி மற்றும் பொறியியல் துறையின் புதிய இயக்குநராக இந்திய பொறியாளர் கருண் ஸ்ரீராமா நியமிக்கப்பட்டுள்ளார்...

****மார்பக புற்றுநோய் அறிகுறிகளை அறிந்து கொள்ள உதவும் ABC of Breast Health App என்ற அலைபேசி செயலியை 12 இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.இதனை அமிதாப்பச்சன் வெளியிட்டுள்ளார்.

கிராமப்புற வாடிக்கையாளர்களின் வசதிக்காக ICICI வங்கி Mera i Mobile App என்ற அலைபேசி செயலியை வெளியிட்டுள்ளது.

இந்திய தொலைத்தொடர்பு துறையில் இங்கிலாந்தைச் சேர்ந்த வோடபோன் நிறுவனமும், ஆதித்ய பிர்லா குழுமத்தின் ஐடியா நிறுவனமும் ஒன்றாக இணைந்துள்ளன.இதன் புதிய தலைவராக குமாரமங்கலம் பிர்லா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கழுத்து, முதுகுத் தண்டு ஆராய்ச்சி சங்கத்தின் (Cervical, Spine Research Society) தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்.ராஜசேகரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.இந்த சங்கத்துக்கு இந்தியர் ஒருவர் தேர்வு செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

உலக அளவில் மிக பிரபலமான திருநங்கைகளுக்காக நடத்தப்படும் மாபெரும் அழகிப் போட்டி தாய்லாந்தின் பட்டாயா நகரில் நடைபெற்றது.இதில் 27 பேரை வென்று 24 வயதாகும் தாய்லாந்தின் ஜிராட்சயா ஸ்ரீமோங்கொலாவா என்பவர்

சர்வதேச அழகியாக முடி சூடியுள்ளார்.இவர் பல் மருத்துவத்தில் பட்டம் பெற்றவர் ஆவார்.

அமெரிக்காவின் இண்டியன்வெல்ஸ் நகரில் நடைபெற்ற இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சக நாட்டு வீரரான வாவ்ரிங்காவை தோற்கடித்து 5வது முறையாக பட்டம் வென்றுள்ளார்.இதற்கு முன் செர்பியாவின் ஜோகோவிக்கும் 5 முறை பட்டம் வென்றுள்ளார்.பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினா சக நாட்டு வீராங்கனை சுவெட்லனா குஸ்நட்சோவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

உத்தரகண்ட்: கங்கை நதி தூய்மை தொடர்பான பொது நல வழக்கில் கங்கை, யமுனை வெறும் நதிகள் அல்ல அவை உயிருள்ள மனிதர்கள் என உத்தரகண்ட் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தியாவின் புனித நதிகளாக கங்கை, யமுனை நதிகள் கருதப்படுகின்றன. கங்கையில் தலை முழுகினால் பாவங்கள் அனைத்தும் தீரும் என மக்களிடையே பரவலான நம்பிக்கை உள்ளது. எனினும் உலகின் மாசடைந்த 10 நதிகள் பட்டியலில் கங்கையும் இடம் பெற்றுள்ளது. இதனால் கங்கையை தூய்மைப்படுத்த பலகோடி ரூபாய்களை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

இந்நிலையில், கங்கையும், யமுனையும் நதிகள் அல்ல அவை உயிருள்ள மனிதர்கள் என உத்தரகண்ட் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கங்கை நதி தூய்மை தொடர்பான பொது நல வழக்கொன்றில் உத்தரகாண்ட் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. அதில், புனித நதிகளான கங்கை, யமுனை இரண்டையும் உயிருள்ள மனிதர்களாக் கருத வேண்டும். கங்கை நதியை தூய்மைப்படுத்தி, புனரமைக்கும் நமாமி கங்கா திட்டத்தின் முதன்மை செயலாளர் மற்றும் தலைமை வழக்கறிஞர் இருவரும் இந்த நதிகளின் சட்ட ரீதியான பெற்றோர்களாக செயல்பட்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

***கிராமப்புறங்களில் சுத்தமான குடிநீர் வசதி இல்லாதவர்கள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் சுமார் 6.3 கோடி பேர் சுத்தமான குடிநீர் வசதி இல்லாதவர்கள் ஆவர். இது கிட்டத்தட்ட இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் மக்கள் தொகையின் அளவு ஆகும். உலகில் சுத்தமான குடிநீர் இன்றி தவிப்பவர்களில் 10% பேர் இந்திய கிராமப்புறங்களில் வசிக்கின்றனர்.

2050 உலகின் மக்கள் தொகையில் 40% பேர் சுத்தமான குடிநீர் இன்றி தவிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. உலகளவில் ஆண்டுக்கு 315,000 குழந்தைகள் தண்ணீர் பிரச்சனையால் உயிரிழக்கின்றனர்.சுத்தமான குடிநீர் இல்லாத காரணத்தால் ஊட்டச்சத்தின்மை குறைபாடு வியாதிகள் 50% மேல் அதிகரித்துள்ளது.

*****அயோத்தியில் ரூ.154 கோடி செலவில் ராமாயண அருங்காட்சியகம்: யோகி ஆதித்யநாத் ஒப்புதல்

உத்திரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அயோத்தியில் ராமாயண அருங்காட்சியகம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இதற்காக 20 ஏக்கர் நிலம் ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான அனைத்து சம்பிரதாயங்களும் இன்னும் 7-10 நாட்களுக்குள் முடிந்து விடும் என்றும், கட்டுமானப் பணிகளை 18 மாதங்களில் முடித்திட உ.பி அரசு திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ரூ.154 கோடி செலவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. எனினும், இதுகுறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் எதையும் யோகி ஆதித்யநாத் தரப்பிலான அரசு இதுவரை வெளியிடவில்லை.

ராமாயண அருங்காட்சியகம் அமைப்பது தொடர்பாக கடந்த வருடம் அயோத்தியா பகுதிக்கு சென்று மத்திய கலாச்சார மந்திரி மகேஷ் சர்மா ஆய்வு நடத்தி இடத்தை தேர்வு செய்தார். ஆய்வுக்குப் பின் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி ராமாயண அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்றும் இதனால் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். ராமாயண அருங்காட்சியகம் அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியும், அகிலேஷ் தலைமையிலான முந்தைய அரசு, அந்த திட்டத்தை நிறுத்தி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

****ஒப்பந்தம் கூறுவது என்ன : இந்தியா - பாக்., இடையே ஓடும் நதி நீரை பங்கிட்டுக் கொள்வது தொடர்பாக, 1960ல், அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவும், அப்போதைய, பாக்., பிரதமர் அயூப் கானும், சிந்து நதி நீர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். பாக்.,கில், உள்ள கராச்சி நகரில் கையெழுத்தான இந்த ஒப்பந்தம், உலக வங்கி நடத்திய பேச்சு அடிப்படையில் உருவானது.சிந்து நதி நீர் ஒப்பந்தப்படி, சிந்து நதி படுகையில், கிழக்கே பாயும், பீஸ், ராவி, சட்லெஜ் ஆகிய நதிகளின் கட்டுப்பாடு, இந்தியாவிடம் இருக்கும்.மேற்கே பாயும், சிந்து, செனாப், ஜீலம் திகளின் கட்டுப்பாடு, பாக்., வசம் இருக்கும். ஆனால், நதி நீரை பங்கிட்டுக் கொள்வது தொடர்பாக, ஒப்பந்தத்தில் இடம்பெற்ற ஷரத்துக்கள் சர்ச்சைக்குரியவையாக உள்ளன.சர்ச்சைக்குரிய நதிகள், முதலில் இந்தியாவுக்குள் பாய்வதால், நதி நீரை, விவசாயம், போக்குவரத்து, மின் உற்பத்தி திட்டங்களுக்கு, இந்தியா பயன்படுத்திக் கொள்ள, ஒப்பந்தம் அனுமதிக்கிறது.அதேசமயம், நதிகளை ஒட்டி, இந்தியா, கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்ள, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. நதி நீர் தொடர்பாக, இரு நாடுகள் இடையே எழும் பிரச்னைகளுக்கு, சிந்து நதி நீர் ஒப்பந்த அடிப்படையில், சட்ட ரீதியிலான நடைமுறைகள் மூலம் தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன.உலகளவில், வெற்றிகரமான நதி நீர் ஒப்பந்தங்களில் ஒன்றாக, சிந்து நதி நீர் ஒப்பந்தம் கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தப்படி, சிந்து நதி நீரில், 20 சதவீதத்தை மட்டுமே, இந்தியா பயன்படுத்திக் கொள்ள முடியும்.

***ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் பிரிவதற்கான மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில், கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை அடுத்த வாரம் 29-ம் தேதி தொடங்கவுள்ளது. இதையடுத்து இந்த மசோதா அந்நாட்டு சட்டமாகியுள்ளது. இதனால், விரைவில் ஐரோப்பிய யூனியனில் இருந்து அதிகாரப்பூர்வமாக பிரிட்டன் பிரிய இருக்கிறது.

***பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் இவ்வருடம் விண்வெளிக்கு செல்லவுள்ளார். இவர் லண்டன் கேம்பிரிட்ஜை சேர்ந்தவர் ஆவார். வெர்ஜின் நிறுவனத்தின் கலக்டிக் விண்கலம் இந்த ஆண்டு இறுதியில் விண்வெளிக்கு பயணம் மேற்கொள்கிறது. அதில் 10 பேர் மட்டுமே பயணம் செய்ய உள்ளனர்.

இவர்களில் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்கும் ஒருவர் ஆவார். இத்தகவலை ஐ.டி.வி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது இதை அவர் தெரிவித்துள்ளார். அப்போது பேசிய அவர், இந்த அரிய வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என நான் நினைக்கவில்லை, விண்வெளிக்கு செல்ல வேண்டும் என்ற எனது ஆசையை தீர்த்து வைப்பவர் யார் என்ற தவிப்பும், எதிர்பார்ப்பும் இருந்தது. வெர்ஜின் நிறுவன தலைவர் ரிச்சர்டு பிரான்சன் எனக்கு அந்த வாய்ப்பை வழங்கியுள்ளார் என அவர் கூறியுள்ளார்.

***சேதி தெரியுமா? - மிதக்கும் சூரிய மின் நிலையம்

இந்தியாவின் மிகப் பெரிய மிதக்கும் சூரிய மின்நிலையம் கேரள மாநிலம் காயம்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி கூட்டுச் சுழல் மின்உற்பத்தி ஆலையில் (Rajiv Gandhi Combined Cycle Power Plant) 100 கிலோ வாட் பீக் (kilowatt peak) ஆற்றல் அளவுகொண்ட சூரிய மின்தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. தேசிய அனல் மின் கழகம் (NTPC - National Thermal Power Corporation Limited) இந்தத் தகடுகளை நிறுவியுள்ளது. மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் முழுக்க உள்நாட்டுத் தொழில்நுட்பத்தால் இந்த மின் நிலையம் அமமைக்கப்பட்டுள்ளது.

தண்ணீருக்குள் சூரிய மின் நிலையம் அமைப்பதால் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் வெப்பம் குறைக்கப்படுகிறது. இதனால் மின் ஆற்றல் உற்பத்தி இழப்பும் குறையும். மேலும் இந்தத் தகடுகளை மேலே நிறுத்துவதன் மூலம் சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாவதும் குறையும். அதனால் மிதக்கும் சூரிய மின் நிலையம் இப்போது உலகம் முழுவதும் பரவலாகிவருகிறது. உலகின் முதல் மிதக்கும் சூரிய மின் நிலையம் தென்கொரியாவின் அன்சியோங் நகரத்தில் நிறுவப்பட்டது.

புதிய தேசிய சுகாதார கொள்கை

சில ஆண்டுகளாக ஒப்புதல் வழங்கப்படாமல் இருந்த தேசிய சுகாதார கொள்கைக்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்னதான சுகாதார கொள்கைதான் இதுவரை நடைமுறையில் இருந்தது. ஆரம்ப சுகாதார நிலையங்களின் மகப்பேறு, நோய்த் தடுப்பு போன்ற சில சேவைகளை மட்டுமே இது வழங்கி வருகிறது. நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கும் பொருட்டு ஒரு முழுமையான சேவை அளிக்கும் வகையிலான திட்டங்களும் மாவட்ட மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்தும் திட்டங்களும் இந்தப் புதிய கொள்கையில் உள்ளன எனச் சொல்லப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து 2.5 சதவீதம் சுகாதாரத்துக்குச் செலவிடவும் இந்தப் புதிய கொள்கை வழிவகை செய்யும். இது கடந்த கொள்கையில் 1.4 சதவீதமாக இருந்தது.

160 கோடி ஆண்டுப் பழமையான பாசி

இந்தியாவில் 160 கோடி ஆண்டுகள் பழமையான பாசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசத்தில் சித்திரகூட் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் பாசிதான், பூமியின் மிகப் பழமையான தாவரமாக இருக்கக்கூடும் எனச் சொல்லப்படுகிறது. இதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது 120 கோடி ஆண்டுகள் பழமையான பாசி. இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் மரங்கள் உண்டான வரலாற்றைக் கண்டறிய முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தக் கண்டுபிடிப்பு ‘PLOS Biology’ இதழில் வெளியாகியுள்ளது.

பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை

450 கிலோ மீட்டர் தூரத்துக்கு சென்று தாக்கும் திறன் கொண்ட பிரம்மோஸ் சூப்பர்சோனிக்-ஐ இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. மார்ச் 11-ம் தேதி ஒடிசாவில் உள்ள சாந்திபூர் கடல் பகுதியில் இந்தச் சோதனை நிகழ்த்தப்பட்டது. இந்தியா - ரஷியா கூட்டு தயாரிப்பான ‘பிரம்மோஸ் சூப்பர்சோனிக்’ ஏவுகணை சுமார் 2 ஆயிரம் கிலோ எடை கொண்டதாகும். 200 கிலோ வெடிப்பொருளுடன் 290 கிலோ மீட்டர் தூரம்வரை பறந்து சென்று தாக்கும் ஆற்றல் கொண்டது. இப்போது அதன் வேகத்தை 450 கிலோ மீட்டராக அதிகப்படுத்தியுள்ளனர். இதன் வேகத்தை 800 கிலோ மீட்டராக மாற்றும் ஆய்வு இப்போது நடைபெற்று வருகிறது. இந்தியாவின் பிரம்மபுத்திரா, ரஷ்யாவின் மோஸ்க்வ (Moskva) ஆகிய இரு நதிகளின் பெயரை இணைத்து இந்த ஏவுகணைக்குப் பெயர் சூட்டப்பட்டது
குறிப்பிடத்தக்கது.

ஒளிரும் தவளை

உலகின் முதல் ஒளிரும் தவளை அர்ஜெண்டினாவில் சாண்டஃபே என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காலை வெளிச்சத்தில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்தத் தவளைகள் இரவில் நீலம், பச்சை நிறங்களை வெளிப்படுத்துபவையாக உள்ளன. ‘Proceedings of the National Academy of Sciences’ என்னும் இதழில் இது குறித்த ஆய்வு வெளியாகியுள்ளது. குறைந்த அலைநீளத்தில் ஒளியை கிரகித்து, நீண்ட அலை நீளத்தில் ஒளியைப் பிரதிபலிப்பதனால்தான் இந்த ஒளிரும் தன்மை ஏற்படுகிறது.

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை

தமிழ்நாடு அரசின் 2017-18-ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கை மார்ச் 16-ம் தேதி சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. நிதியமைச்சர் ஜெயக்குமார் இதைத் தாக்கல் செய்து பேசினார். இந்த ஆண்டின் மொத்த நிதிநிலைப் பற்றாக்குறை ரூ. 41, 977 கோடியாகவும் மூலதனச் செலவு ரூ. 27, 789 கோடியாகவும் இருக்கும் எனச் சொல்லப்பட்டுள்ளது. திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 41,925 கோடி கடன் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறைக்கு மொத்தம் ரூ. 2192 கோடி, சுகாதாரத் துறைக்கு ரூ. 10158 கோடி, பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ. 26932 கோடி, உயர் கல்வித்துறைக்கு ரூ. 3680 கோடி, தமிழ் வளர்ச்சிக்கு ரூ. 48 கோடி, காவல்துறைக்கு ரூ. 6483 கோடி,

தீயணைப்புத்துறைக்கு ரூ.253 கோடி, சிறைத்துறைக்கு ரூ. 282 கோடி, வேளாண் துறைக்கு ரூ. 1680.73 கோடி, மீன்வளத்துறைக்கு ரூ. 768 கோடி, தொழிலாளர் நலத்துறைக்கு ரூ. 1010 கோடி, ஆதி திராவிடர் நலத்துறைக்கு ரூ. 3,009 கோடி, நீர் வளத்துறைக்கு ரூ. 4791 கோடி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 988 கோடி, மின்சாரம்- எரிசக்தித் துறைக்கு ரூ. 16998 கோடி, வருவாய் பற்றாக்குறை ரூ. 15931 கோடி.

மேலும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ. 6000 கோடி; ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்துக்கு ரூ.3100 கோடி; சாலை பாதுகாப்புக்கு ரூ.100 கோடி; சுற்றுலாத்துறையில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ. 403 கோடி; நான்கு வழிச்சாலைகள் தரம் உயர்த்த ரூ.1508 கோடி; பிரதம மந்திரி கிராமப்புற சாலைத் திட்டத்துக்கு ரூ. 758 கோடி; சென்னை புறநகர் சாலை மேம்பாடு முதற்கட்டப் பணிகளுக்கு ரூ. 232 கோடி; திறன்மிகு நகரங்கள் திட்டத்துக்கு ரூ.1200 கோடி; அடல் நகர்ப்புற புத்துணர்வுத் திட்டத்துக்கு ரூ.1400 கோடி; சமச்சீர் வளர்ச்சித் திட்டத்துக்கு ரூ. 282.22 கோடி; ஒரு லட்சம் இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சியளிக்க ரூ.150 கோடி; நகராட்சி நிர்வாகத் துறைக்கு ரூ.13996 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது..

***5 மாநில புதிய முதலமைச்சர்கள்&ஆளுநர்கள்:

கோவா - மனோகர் பாரிக்கர்(10). ( ஆளுநர்- மிருதுளா சின்ஹா)

மணிப்பூர்- ப்ரெண் சிங்(12) ( ஆளுநர் -நஜ்மா ஹெப்துல்லா)

உத்தரகண்ட்- திரிவென்ர சிங் ராவத்(9) (ஆளுநர்-டாக்டர் கிரிஷன் காந்த் பால்)

பஞ்சாப்- அமரீந்தர் சிங்(26). (ஆளுநர்-VP சிங் பட்நோரி)

உத்தரபிரதேசம் - ஆதித்யநாத்(32). (ஆளுநர்-ராம் நாயக்)

# "Mallikarjun kharge" பொதுக் கணக்கு குழுவின்(PAC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்

# கர்நாடகா மாநில அரசு பெங்களுரில் உள்ள "நம்ம கேன்டின்களுக்கு" 100 கோடி ரூபாயை பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளது

- மேலும் மதிய உணவு 5ரூபாய்க்கும் இரவு உணவு 10 ரூபாய்க்கும் அளிக்க முடிவெடுத்துள்ளது

# கர்நாடக அரசு பட்ஜெட் கூட்டத்தொடரில் மதுபான பொருள்களுக்கு விதிக்கப்படும் கலால் வரியை நீக்கியுள்ளது

# மத்திய அமைச்சரவைக் குழு "Indian Institutes of Information Technology(Public Private Partnership) 2017 மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது

# ஆந்திர மாநிலத்தின் வெளிப்புற கட்டமைப்பு மற்றும் போலாவரம் நீர் இறைப்பு திட்டத்திற்கு சிறப்பு உதவிகளை செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

# இந்தியா-பங்களாதேஷ் எல்லைப் பகுதிகளை மூடுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது

# தேசிய சுதாதார கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

# 19 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தானில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கியுள்ளது

- கடைசியாக 1998ல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது

- பாகிஸ்தான் 6வது அதிக மக்கள்தொகை உள்ள நாடாகும்

# 2022ல் தென் ஆப்ரிக்கா டர்பனில்(Durban) நடைபெற இருந்த காமன்வெல்த் போட்டிகள் போதிய நிதியுதவி இல்லாத காரணத்தால் அங்கு நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது

# “The Book of Indian Dogs” என்ற புத்தகத்தை எழுதியவர் "S. Theodore Baskaran"

# புதிய வாழைப்பழ ஆராய்ச்சி மையத்தை பீகார் மாநிலம் வைசாலியில் மத்திய அரசு தொடங்கி வைத்துள்ளது

# "Mercer's 19th quality living survey"ன் படி ஆஸ்திரியாவின் தலைநகர் "வியன்னா" அதிக தரம் வாய்ந்த(higheat quality) நகரமாக 8வது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

- பாக்தாத் மோசமான நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

- இந்திய் நகரங்களில் "ஹைதரபாத்" முதலிடத்தில் உள்ளது

- இப்பட்டியலில் 230 நகரங்கள் இடம் பெற்றுள்ளன

# மத்திய பிரதேச மாநிலத்தில் அமையவுள்ள "Rewa Solar Plant"ற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க உள்ளது

# உலகின் முதல் ஒளிரும் தவளை அர்ஜென்டினாவில் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது

- சாதாரண ஒளியில் மஞ்சள்,சிவப்பு மற்றும் இளம்பச்சை நிறத்தில் ஒளிரும்

- நீலம் மற்றும் பச்சை நிறத்தில் இருளில் ஒளிரும்

# "The court of Arbitration for Sport" இரஷ்ய நாட்டின் முன்னாள் தடகள் மருத்துவ சம்மேளனத்தின்(Swimming) முன்னாள் தலைவர் "Sergei Portugalov" வாழ்நாள் தடை(lifetime ban) விதித்துள்ளது

- இரஷ்யா தடகள வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்த உதவியதற்காக இத்தடை விதிக்கப்பட்டுள்ளது

# March-13 காமன்வெல்த் தினம்

- Theme 2017- "A Peace Building Commonwealth"

***ஏர்டெல் பேமென்ட்ஸ் வங்கி, நாட்டில் தொடங்கப்பட்ட முதல் பேமென்ட் வங்கியாகும். இதற்காக, ரூ.3,000 கோடியை முதலீடு செய்ய ஏர்டெல் உறுதிபூண்டுள்ளது. மேலும், 50 லட்சம் வணிகர்கள் மூலம் நாடு முழுவதும் டிஜிட்டல் பணப்பரிமாற்றத்தை விரிவுபடுத்த ஏர்டெல் வங்கி திட்டமிட்டுள்ளது.

தனி நபர் வங்கி கணக்கு மூலம் அதிகபட்சமாக ரூ. 1 லட்சம் வரையில் டெபாசிட் பெற பேமென்ட் வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

***சேதி தெரியுமா? -

சூரியனில் நாசா

அமெரிக்காவின் 'நாசா' மையம் சூரியனுக்கு விண்கலத்தை அனுப்பவுள்ளது. பூமியில் இருந்து 14.96 கோடி கி.மீ. தொலைவில் சூரியன் உள்ளது. இதன் வெப்பம் மற்றக் கிரகங்களைவிட அதிகமானது. அதனால் சூரியனில் ஆராய்ச்சியில் ஈடுபடுவது எளிதான காரியமல்ல. அதன் வெப்பத்தைத் தாங்குமளவுக்கு விசேஷ விண்கலம் தயாரிக்கும் பணியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுவருகிறார்கள். இது 'நாசா' விஞ்ஞானிகளின் முதல் முயற்சி என கோட்டார்ட் விண்வெளி மைய விஞ்ஞானி எரிக் கிறிஸ்டியன் தெரிவித்துள்ளார். சூரியனின் உள்புற வெப்ப நிலை 20 லட்சம் டிகிரி செல்சியஸ்.

ஆனால் அதன் சுற்றுப்புற வெப்ப நிலை 5,500 டிகிரி செல்சியஸ். அதனால் சூரியனின் மேற்பரப்பில் ஆய்வு நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். 11.4 சென்டி மீட்டர் கன அளவு உள்ள கார்பன் காம்போஸிட் தடுப்பால் விண்கலம் உருவாக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு 2018-ல் இந்தப் புதிய விண்கலம் சூரியனுக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்பதிவு இல்லாத ரயில்

முன்பதிவுசெய்யப்படாத பயணிகளுக்கான விசேஷ ரயில் சேவை அந்த்யோதயா எக்ஸ்பிரஸ் (Antyodaya Express) தனது சேவையைத் தொடங்கியுள்ளது. அலுமினியம் காம்போசிட்டில் அதன் உள்ளறை வடிவமைக்கப்பட்டுள்ளது. துருப்பிடிக்காத இரும்பால் கதவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீர் சுத்திகரிப்பு சாதனங்கள், பசுமைக் கழிவறை, செல்ஃபோன் சார்ஜ் செய்யும் வசதி, எல்.இ.டி. விளக்கு, திருட்டைத் தடுக்கும் வசதி, தீ விபத்தைத் தடுக்கும் வசதி போன்ற பல வசதிகளுடன் நவீன முறையில் இந்த ரயில் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெகுதூரம் செல்லும் ரயிலில் முதல்முறையாக இரு பக்கமும் என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த அந்த்யோதயா எக்ஸ்பிரஸில் முதல் ரயில் மும்பைக்கும் டாடா நகருக்கும் இடையிலும், இரண்டாம் ரயில் கொச்சிக்கும் ஹவுராவுக்கும் இடையிலும் இயக்கப்படுகிறது.

முதல் ஹெலிகாப்டர் நிலையம்

நாட்டின் முதல் ஒருங்கிணைந்த ஹெலிகாப்டர் நிலையம் டெல்லியில் ரோகிணி பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. 25 ஏக்கரில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் 16 ஹெலிகாப்டர்களை நிறுத்தி வைத்துக்கொள்ளும் வசதி உள்ளது. ஹெலிகாப்டர்களைப் பழுது நீக்கும் வசதியும் இந்த நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 150 பயணிகளைக் கையாளக்கூடிய வசதியும் உள்ளது. பொதுத் துறை நிறுவனமான 'பவன் ஹான்ஸ்' நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தை மத்திய விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் அசோக் கஜபதி ராஜு திறந்து வைத்தார்.

7 புதிய தவளைகள்

கேரள மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் 7 புதிய சிறு தவளைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தப் புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இவை இரவுத் தவளைகள் ஆகும். இந்தத் தவளை இனங்கள் அனைத்தும் குழந்தைகளின் நகக் கண்களில் அமர்ந்துகொள்ளும் அளவில் மிகச் சிறியவை. சுமார் 0.7 அங்குலம் அளவு கொண்டவை.

அவற்றுள் நான்கு தவளைகள் 0.5 அங்குலம் அளவுக்கு மிகச் சிறியவை. உலகின் மிகச் சிறிய தவளை இனங்கள் இவை. பியர்ஜெ (PeerJ) என்னும் ஆராய்ச்சி இதழில் பிப்ரவரி 21-ல் இந்த ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்துள்ளன. கேரள மாநில வனத் துறையுடன் இணைந்து டெல்லி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டனர்.

சீமைக் கருவேலத்தை அழிக்க உத்தரவு

சீமைக் கருவேல மரங்களால் நிலத்தடி நீர் குறைவதாலும் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதாலும் அவற்றை அகற்றக் கோரி பொது நல வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை கிளை இரு மாதங்களுக்குள் கருவேல மரங்களை அகற்ற உத்தரவிட்டுள்ளது. சீமைக் கருவேலம் (prosopis juliflora) மேற்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தாவர இனம். இது 1960-ம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு எரிபொருளுக்காகக் கொண்டுவரப்பட்டது.

துப்பாக்கி சுடுதலில் உலக சாதனை

டெல்லியில் நடந்த உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் (International Shooting Sport Federation-ISSF) ஆண்கள் 50 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில், இந்திய வீரர் ஜித்து ராய் தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரர் அமன்பிரீத் சிங்கிற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது. ஜித்து ராய் மொத்தம் 230.1 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துப் புதிய உலகச் சாதனையும் படைத்துள்ளார்.

லக்னோவைச் சேர்ந்த ராய், இந்திய ராணுவத்தின் கூர்கா படைப் பிரிவில் (11-வது பட்டாலியன்) பணியாற்றி வருகிறார். 2014 -ல் நடந்த இரண்டு உலகக் கோப்பை போட்டித் தொடர்களில் 2 வெள்ளி பதக்கங்களையும், ஒரு தங்கப் பதக்கத்தையும் அவர் வென்றுள்ளார்.

***சேதி தெரியுமா? - இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு எதிர்ப்பு

ஓஎன்ஜிசி நிறுவனம் மூலம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் சில வருடங்களுக்கு முன்பு கிட்டத்தட்ட இரண்டாயிரம் அடிக்கு ஆழ்துளைக் கிணறு தோண்டி நிலத்தடியில் எரிபொருள் இருப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனை அடுத்து, இந்திய அளவில் இயற்கை எரிவாயு எடுக்க ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மத்திய அரசு முன்வைத்தது. இத்திட்டத்துக்காக ஒப்பந்தம் மூலம் எண்ணெய் நிறுவனங்களை மத்திய அரசு தேர்வுசெய்தது. நெடுவாசல் உட்பட இந்தியா முழுவதும் 31 இடங்களில் இயற்கை எரிவாயு எடுக்க அந்நிறுவனங்களுக்குப் பிப்ரவரி 15 அன்று ஒப்புதல் அளித்தது. ஆனால் இயற்கை எரிவாயு எடுப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இயற்கை ஆர்வலர்களால் நெடுவாசலில் பதாகைகள் வைக்கப்பட்டன, துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. இத்திட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டுமென நெடுவாசல் மக்கள் பிப்ரவரி 16 அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அடுத்த தினம் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் புதுக்கோட்டை ஆட்சியரைச் சந்தித்துத் திட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரி மனு அளித்தனர். மேலும் 26 அன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்குவோம் என உரிமை மீட்புக் குழு அறிவித்தது. “ஹைட்ரோ கார்பன் திட்டத்தால் கிட்டத்தட்ட 5 லட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள். நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியாமல் போய்விடும். ஆகையால் இத்திட்டத்தை அமல்படுத்த அனுமதிக்க மாட்டோம்” என அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் துணைத் தலைவர் கே. வரதராஜன் 24 பிப்ரவரி அன்று பேட்டி அளித்தார். நெடுவாசலில் மட்டுமல்லாமல் கீரமங்கலம், வடகாடு, வாணக்கன் காடு, கோட்டைக்காடு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களை இயற்கை ஆர்வலர்களும் பல்வேறு கட்சியினரும் சந்தித்து இத்திட்த்தை அமல்படுத்துவது குறித்து அவர்களுடைய கருத்தைக் கேட்டுவருகிறார்கள்.

சோயாபீனிலிருந்து கிராஃபீம்

உலகின் மிக உறுதியானதும் மெல்லியதுமான பொருளான கிராஃபீம் (grapheme) சோயாபீனிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவிலுள்ள காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழிற்சாலை ஆராய்ச்சி அமைப்பை (Commonwealth Scientific and Industrial Research Organisation- CSIRO) சேர்ந்த விஞ்ஞானிகள் இதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் சோயாபீனிலிருந்து தரமான கிராஃபீம் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சோயாபீனிலிருந்து கிராஃபீம் பொருளை உருவாக்கக் கிராஃப்ஏர் (GraphAir) என்னும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் ஒரே செயல்முறையில் சோயாபீனிலிருந்து கிராஃபீன் எடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர். கார்ஃபீனிலிருந்து உருவான இந்தப் பொருள், அணுவைப் போன்ற தோற்றம் கொண்டது. இது மிகச் சிறந்த மின் கடத்தி. அதனால் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் மிக நுண்ணிய மின்னணுவியல் சாதனங்களில் கடத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ரூ. 250 கோடியில் செயற்கை மழை

2017-ம் ஆண்டுக்கான செயற்கை மழைக்காக ரூ. 250 கோடிக்கு மகாராஷ்டிரா அரசு அனுமதி அளித்துள்ளது. மகாராஷ்டிராவின் மழை மறைவுப் பிரதேசமான சோலாப்பூர் மாவட்டத்தில் இந்தச் செயற்கை மழை பெய்யவைக்கப்படவுள்ளது. இந்திய வான இயல் ஆய்வு நிறுவனம் (Indian Institute of Tropical Meteorology) இந்தத் திட்டத்தை ஒருங்கிணைக்கவுள்ளது. இதில் 100 மேகங்கள் ரடார் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் மீது சில்வர் அயோடைட் தெளிக்கப்படும். கூடவே உலர் பனிக்கட்டியும் தெளிக்கப்படும். இதற்கு ஜெட் ராக்கெட் பயன்படுத்தப்படும். உலகின் முதல் செயற்கை மழை 1946-ம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க்கில் பெய்விக்கப்பட்டது. இந்தியாவில் முதல் செயற்கை மழை 1983-ம் ஆண்டு தமிழ்நாட்டில் பெய்விக்கப்பட்டது.

புதிய கண்டம் கண்டுபிடிப்பு

தென் மேற்கு பசிபிக் கடற்பகுதியில் ஜிலாண்டியா என்னும் கண்டம் புதையுண்டிருப்பதைப் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆஸ்திரேலியா கண்டத்தில் மூன்றில் இரு பங்கு பரப்பளவு கொண்டது இது. 45 லட்சம் சதுர கிலோ

மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தக் கண்டத்தில் 94 சதவீதம் கடலுக்கு அடியில் புதைந்துள்ளது. அவற்றில் மீதம் கடல் மட்டத்துக்கு மேல் காணப்படும் பகுதிகள்தான் நியூசிலாந்தும் நியூ காலண்டோனியா தீவும். ஆஸ்திரேலியாவும் இந்தக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. 8 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கண்டம் ஆஸ்திரேலியாவிலிருந்து பிரிந்தது. இந்த இரண்டு கண்டமும் 10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு அண்டார்ட்டிகாவில் இருந்து பிரிந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஜியோலாஜிக்கல் சொசைட்டி ஆஃப் அமெரிக்கா (Geological Society of America) இந்தக் கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. வரி: இழப்பீட்டுக்கு அனுமதி

சரக்கு மற்றும் சேவை வரியை (Goods and Service Tax - GST) அமல்படுத்துவதன் மூலம் மாநில அரசுகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்வதற்கான சட்டத்துக்கு ஜி.எஸ்.டி. கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் உதய்ப்பூரில் நடந்த இந்தக் கூட்டத்தில் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஜி.எஸ்.டி. கவுன்சில் இந்திய அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 279A-ன்படி உருவாக்கப்பட்டது. இந்தச் சட்ட வரைவு மார்ச் 9-ம் தேதி தொடங்கவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

செவ்வாயில் முதல் நகரம்

ஐக்கிய அரசு நாடுகள் செவ்வாய் கிரகத்தில் நகரம் ஒன்றை இன்னும் 100 ஆண்டுகளில் உருவாக்கவுள்ளது. இதற்கான அறிவிப்பை அந்நாட்டின் துணை அதிபர் ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம், அபுதாபி இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆகியோர் வெளியிட்டனர். இதற்கான ஆய்வுகள் தொடங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்துக்காகச் செயற்கைக்கோள் ஒன்றை (Hope) 2020-ம் ஆண்டு ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் மூலம் ஐக்கிய அரபு நாடுகள் விண்ணில் செலுத்தவுள்ளது.

***ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை வங்கிகளான ஸ்டேட் பேங்க் ஆப்பிகாநீர் மற்றும் ஜெய்ப்பூர், ஸ்டேட் பேங்க் ஆப் ஹைதராபாத், ஸ்டேட் பேங்க் ஆப் மைசூர், ஸ்டேட் பேங்க் ஆப் பாட்டியாலா மற்றும் ஸ்டேட் பேங்க் ஆப் திருவாங்கூர் ஆகியவை வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளைகளாக செயல்படும் எஸ்பிஐ வங்கி அறிவித்துள்ளது.

***மார்ச் 13- உலகின் மக் கள் தொகையில் முதலிடத்தை தற்போது சீனா வகித்து வரு கின்றது. 135 கோடி மக்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒரு இணையர் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ளும் சட்டம் சீனாவில் நடைமுறை யில் இருந்துவந்தது. இச்சட்டத் தால் வரும் காலத்தில் இளை ஞர்கள் பலம் குறையும் எனக் கருதிய அரசு சில ஆண்டுக ளுக்கு முன்னர் அச்சட்டத்தை நீக்கியது.இந்நிலையில், 2016ஆ-ம் ஆண்டில் 1.84 லட்சம் குழந் தைகள் புதிதாக பிறந்துள்ளன. இதே விகிதம் நீடித்தால் வரும் 2030-ஆம் ஆண்டில் மக்கள் தொகை 145 கோடியாக அதிக ரிக்கும் என அந்நாட்டு தேசிய சுகாதார மற்றும் குடும்பக் கட்டுப்பாடு இயக்குநரகத்தின் துணைத் தலைவர் வாங் பேய்ன் தெரிவித்துள்ளார். ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 75 சத விகித்தினர் 15 முதல் 65 வய துடையவராக இருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்து உள்ளார். இரண்டாவது குழந்தை பெற்றுக் கொள்ள தடை இல்லை என்ற போதி லும், 28 சதவிகிதம் இணையர் மட்டுமே இரண்டாவது குழந்தை பெற்றுள்ளனர் என் றும் அவர் கூறியுள்ளார்.

***இந்திய , பாகிஸ்தான் எல்லையில் நாட்டின் மிக அதி உயர கம்பத்தில் ( 360 அடி) தேசிய கொடி பறக்க விடப்பட்டுள்ளது. இந்த கொடிக்கம்பம் பஞ்சாப் மாநில அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 55 டன் எடை கொண்ட இதன் மொத்த செலவு ரூ.3.50 கோடி ஆகும். இதற்கு முன்னதாக ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சியில் 293 அடி உயரக்கம்பத்தில் கொடி பறக்க விடப்பட்டது.

***30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியக் கடற்படையில் சேவையாற்றிய ஐ.என்.எஸ் விராட், இன்றுடன் ஓய்வுபெறுகிறது. விராட் பற்றிய சில நினைவுகள்...

மிகப் பழைமையான விமானந்தாங்கி கப்பல்களில் ஒன்று ஐ.என்.எஸ் விராட். இது,1944-ல் இங்கிலாந்து நாட்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. ஹெச்.எம்.எஸ்.ஹெர்மிஸ் (ஆர்-12) என்று பெயரிடப்பட்ட இந்த விமானந்தாங்கி கப்பல்,1959-ம் ஆண்டு இங்கிலாந்து கடற்படையில் சேர்க்கப்பட்டது. 1984-ல் அந்த நாட்டு கப்பற்படையிலிருந்து ஓய்வுபெற்ற அந்தக் கப்பலை இந்தியா வாங்கி, ஐ.என்.எஸ் விராட் என்று பெயரிட்டு சில மாற்றங்களைச் செய்தது. அதற்குப் பின்னர் அது, 1987-ல் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை, பாட்டியம்மாவாக (கிராண்ட் ஓல்டு லேடி) இந்தியக் கடற்பகுதியைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது. 28,700 டன் எடைகொண்ட இந்தக் கப்பலின் நீளம் 226.5 மீட்டர், அகலம் 48.78 மீட்டர். மணிக்கு 52 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கக் கூடியது. அதிகபட்சமாக இந்தக் கப்பலில் 2,100 போர் வீரர்கள் மற்றும் விமானப் பணியாளர்கள் பயணிக்க முடியும். 1989-ம் ஆண்டு இலங்கைக்கு, இந்திய அமைதிப்படை சென்றபோதும், 2001-ல் இந்திய நாடாளுமன்றத் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தின்போதும் ஐ.என்.எஸ் விராட் விமானந்தாங்கி கப்பல், இந்தியக் கடற்படையின் செயல்பாட்டில் முக்கியப் பங்காற்றியது.

இந்தியாவிடம் ஐ.என்.ஐ விக்ராந்த், ஐ.என்.எஸ் விராட் என்று இரண்டு விமானந்தாங்கி போர் கப்பல்கள் இருந்தன. மூன்றாவதாக ரஷ்யாவிடமிருந்து வாங்கிய விமானந்தாங்கி கப்பல் ஐ.என்.எஸ் விக்ரமாதித்யா பணியில் சேர்ந்தது. தற்போது, விக்ரமாதித்யா மட்டுமே இந்தியாவிடம் உள்ளது. இன்னொரு கப்பல் கொச்சி, கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வருகிறது. இந்தப் புதிய கப்பல் 2018-ல் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கும் 'விக்ராந்த்' என்று பெயரிடப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஐ.என்.எஸ் விக்ராந்த் ஓய்வுபெற்றது. அந்தக் கப்பலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட இரும்பைப் பயன்படுத்தி வாகனம் தயாரிப்பதாக ஒரு மோட்டார் சைக்கிள் நிறுவனம் விளம்பரம் செய்வது குறிப்பிடத்தக்கது. ஓய்வுபெறும் அந்த விமானந்தாங்கி கப்பலை, ஆந்திர அரசு வாங்கப் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ஆந்திர அரசு இதை வாங்கி, அதைக்கொண்டு விசாகப்பட்டினம் அருகில் போர்க்கப்பல்

அருங்காட்சியகமாகவும், சொகுசு விடுதியாகவும் மாற்றத் திட்டமிட்டுள்ளது. இதன் செலவு 1,000 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

****சேதி தெரியுமா? -

முதல் பசுமை கப்பல்

ஐ.என்.எஸ். சர்வெக்ஷக் இந்தியப் போர்க் கப்பலில் மேற்புறத்தில் கடந்த ஆறு மாதமாக மேற்கொள்ளப்பட்ட சூரியத் தகடுகள் (Solar cell) பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளது. இந்தப் பணி கேரளத்தின் கொச்சியில் நடந்தது. இந்தியாவில் போர்க் கப்பல் ஒன்றில் சோலார் தகடுகள் பொருத்தப்படுவது இதுவே முதல் முறை. பொதுவாக டீசல் ஜெனரேட்டர் கொண்டுதான் கப்பலில் மின்சாரம் உற்பத்திசெய்யப்படும். அது நாள் ஒன்றுக்கு 165 கிலோ கார்பனை வெளியிட்டுச் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும்.

ஆனால் சூரியனின் வெப்ப ஆற்றலைச் சூரியத் தகடுகள் மூலம் மின்னாற்றலாக மாற்றும் இந்த முறை சுற்றுச்சூழலுக்கு உகந்தது. ஆகையால் இது பசுமைத் தொழில் நுட்பமாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் இந்தியாவின் முதல் பசுமை கப்பல் இதுவே. இந்தக் கப்பலில் 18 சோலார் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 5.4 கிலோவாட் மின்சாரம் உற்பத்திசெய்யலாம். இந்த மின்சாரம், போர்க் கப்பலில் உள்ள விளக்குகளையும் குளிர் சாதன எந்திரங்களையும் இயக்கப் பயன்படும் எனக் கூறப்படுகிறது.

மிதக்கும் தொடக்கப்பள்ளி

லோக்தக் ஏரி இந்தியாவின் மிகப் பெரிய நன்னீர் ஏரி. இது மணிப்பூரில் உள்ளது. இந்த ஏரி பம்திஸ் (phumdis) என்னும் சிறு சிறு தீவுகளால் ஆனது. இவற்றில் நான்காயிரம் மக்கள் இந்த நன்னீர் ஏரியின் மீன் வளத்தை நம்பி வசிக்கிறார்கள். இந்தச் சிறிய தீவிலிருந்து நிலப் பகுதியில் இருக்கும் பள்ளிகளுக்குக் குழந்தைகளை அனுப்பச் சிரமமாக இருப்பதால், இந்த ஏரியிலேயே பள்ளி தொடங்க முடிவெடுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. லோக்தக் ஏரி மீனவச் சங்கம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இந்தப் பள்ளியைத் தொடங்கியுள்ளது. இந்தப் பள்ளி மூலம் படிப்பறிவு இல்லாத பெற்றோர்களுக்கும் கல்வி பயிற்றுவிக்கும் திட்டமும் உள்ளது. தொடக்கக் கட்டமாக இந்தப் பள்ளியில் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் இருவர் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். இந்தியாவிலேயே முதல் முறையாக இந்தப் பகுதியில் மிதக்கும் தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டிருக்கிறது. உலகின் ஒரே மிதக்கும் தேசியப் பூங்காவான கெய்புல் லாம்சோ தேசியப் பூங்கா இந்த ஏரியில்தான் அமைந்துள்ளது.

தனியார் வங்கிகளுக்குச் சவால்!

பாரத ஸ்டேட் வங்கியுடன், ஸ்டேட் பேங்க் ஆஃப் திருவாங்கூர் , ஸ்டேட் பேங்க் ஆஃப் பட்டியாலா, ஸ்டேட் பேங்க் ஆஃப் மைசூர், ஸ்டேட் பாங் ஆஃப் ஐதராபாத், ஸ்டேட் பேங்க் ஆஃப் ஜெய்பூர் ஆகிய ஐந்து வங்கிகளை இணைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் செலவினம் ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய் அளவுக்குக் குறையும் எனத் தெரியவந்துள்ளது. மேலும் பாரத ஸ்டேட் வங்கியின் சொத்துமதிப்பு சுமார் ரூ. 37 லட்சம் கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 50 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுடன் 22,500 கிளைகள், 58 ஆயிரம் ஏடிஎம்கள் கொண்ட வங்கியாகப் பாரத ஸ்டேட் வங்கி உருவெடுக்கும். பொதுத்துறை வங்கிகளைத் தனியார் வங்கிகளோடு போட்டியிடும் வகையில் மேம்படுத்துவதற்கான இந்திரத் தனுஷ் திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்த இணைப்புத் திட்டம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிராந்தியப் பொருட்களுக்குக் காப்புரிமை

புவிசார் குறியீடு (Geographical Indications) பட்டியலில் நாக்பூர் ஆரஞ்சு, மதுரை மல்லி, காஞ்சிபுரம் பட்டு, ஆளப்புழா கயிறு, பாலராமபுரம் சேலை உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட இந்தியப் பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. புவிசார் குறியீடு மூலமாகப் பிராந்திய அளவில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு அறிவுசார் சொத்துக் காப்புரிமை சட்டத்தின் கீழ் பாதுகாப்பும், சர்வதேச அளவிலான அங்கீகாரமும் வழங்கப்படுகிறது. கேரள மாநிலம் நிலம்பூர் தேக்குக்குப் புவிசார் குறியீடு இப்போது கிடைத்துள்ளது. நிலம்பூர் காட்டுப் பகுதியில் உள்ள தேக்கு மரங்கள் தனித்துவம் வாய்ந்தவை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மலபார் ஆட்சியர் எச்.வி.கனாலி என்பவரால் இங்கு மரங்கள் நடப்பட்டன. அவரது பெயராலேயே கனாலி ப்ளாட் என இந்தக் காடு அழைக்கப்படுகிறது. இங்கு உலகின் முதல் தேக்கு காட்சியகம் உள்ளது.

புதிய முதல்வர்

எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தின் 13-வது முதல்வராகப் பிப்ரவரி 16 அன்று பதவியேற்றார். அவருடன் 30 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக்கொண்டனர். ஆளுநர் மாளிகையான ராஜ் பவனில் நடந்த விழாவில் ஆளுநர் வித்யாசாகர் ராவ் முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் பதவியேற்பு, ரகசியக் காப்பு பிரமாணம் செய்துவைத்தார். அதிமுக இரு குழுக்களாகப் பிரிந்துள்ள நிலையில் புதிய அமைச்சரவை 15 நாள்களுக்குள் தங்கள் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

விரைவில் கம்பலா போட்டி

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நடந்த போராட்டம் வெற்றிபெற்றததைத் தொடர்ந்து கர்நாடகாவின் பாரம்பரியக் காளைப் பந்தயமான கம்பலாவுக்கும் ஆதரவாகப் போராட்டம் வெடித்தது. அம்மாநில முதலமைச்சர் சித்தராமைய்யா, தேவைப்பட்டால் அவசரச் சட்டம் கொண்டுவரப்படும் என்றும் சித்தராமைய்யா தெரிவித்தார். பீட்டா அமைப்பு தொடர்ந்த வழக்கால் 2016-ம் ஆண்டு கம்பலாவுக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இப்போது போராட்டம்

நடத்தப்பட்டதைத் தொடர்ந்து கம்பலா போட்டிக்கு அனுமதி அளிக்கும் சட்டம் கர்நாடகச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

****பீகார் மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் இலவச வைபை சேவை திட்டத்தை துவக்கி வைத்தார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் .கல்லூரிகளில் இலவச வைபை:- பீகார் தின விழாவை முன்னிட்டு மாநில தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் 273 கல்லூரிகள் , 16 பல்கலைகழகங்கள் மற்றும் 30 கல்வி நிறுவனங்களில் இலவச வைபை சேவையை துவக்கி வைத்தார்.

--->உலக கோடீஸ்வரர்களின் புதிய பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதில் அதிக கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவுக்கு 4-வது இடம் கிடைத்துள்ளது.

இப்பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள 101 இந்திய கோடீஸ்வரர்களில் முகேஷ் அம்பானி முதல் இடத்தில் உள்ளார்.

'உலக கோடீஸ்வரர்கள்' 2017 பட்டியலிலுள்ள 2,043 நபர்களின் பெயரை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

போர்ப்ஸ் வெளியிட்ட புதிய பணக்காரர்கள் பட்டியலில் இந்தியாவில் 101 கோடீஸ்வரர்கள் உள்ளனர். இதில் கூடுதல் சிறப்பு என்னவென்றால் முதல் முறையாக இந்தியாவில் 100க்கும் மேற்பட்ட தனி நபர்கள் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் உள்ளனர்.

மேலும் போர்ப்ஸ் வெளியிட்ட உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில், இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாடுவாழ் இந்தியர்களான இந்துஜா சகோதரர்கள் 64வது இடத்திலும் (சொத்து மதிப்பு 15.4 பில்லியன் டாலர் ), இந்தியாவில் பிறந்த வெளிநாடு வாழ் தொழிலதிபரான பல்லோன்ஜி மிஸ்திரி 77வது இடத்திலும் (சொத்து மதிப்பு 14.3 பில்லியன் டாலர்) உள்ளனர்.

இண்டோரமா துணை நிறுவனர் ஸ்ரீ பிரகாஷ் லோகியா 288- வது இடத்தில் உள்ளார் (இவரின் சொத்து மதிப்பு 5.4 பில்லியன் டாலர் )

இந்தப் பட்டியலில் இந்திய பெரும் பணக்காரர் முகேஷ் அம்பானிக்கு 33-வது இடம் (சொத்து மதிப்பு 23.2 பில்லியன் டாலர்) கிடைத்துள்ளது. அவரது சகோதரர் அனில் அம்பானி 745- வது (சொத்து மதிப்பு 2.7 பில்லியன் டாலர்) இடத்தில் உள்ளார்.

இந்தப் பட்டியலில் ஸ்டீல் குழும தலைவர் லட்சுமி மிட்டல் 56-வது இடத்தில் உள்ளார்.

பட்டியலில் இடம்பெற்ற 4 இந்திய பெண்கள்

போர்ப்ஸ் வெளியிட்ட கோட்டீஸ்வரர்கள் பட்டியலில் நான்கு இந்திய பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஓ.பி. ஜிண்டால் நிறுவனத் தலைவர் சாவித்ரி ஜிண்டால் 303-வது இடத்தில் உள்ளார் இவரின் சொத்து மதிப்பு 5.2 பில்லியன் டாலர் ஆகும்.

இவருக்கு அடுத்து கோத்ரெஜ் நிறுவனத்தின் ஸ்மிதா கிரிஸ்னா 814-வது இடத்திலும், பயோகான் நிறுவனர் கிரண் மஜூம்தார் ஷா 973-வது இடத்திலும், யுஎஸ்வி நிறுவனத்தின் தலைவர் லீனா திவாரி 1030-வது இடத்திலும் உள்ளனர்.

இந்தப்பட்டியலில் விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அசிம் பிரேம்ஜி, அதானி குழும நிறுவனர் கவுதம் அதானி, பேடைம் நிறுவனர் விஜய் சேகர் சர்மா ஆகியோரும் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பேடைம் இப்பட்டியலில் இடம்பெற்றிருப்பது குறித்து போர்ப்ஸ் பத்திரிகை தரப்பில் "இந்திய அரசு பணமதிப்பு நீக்கத்தை அமல்படுத்தியபோது பேடைம் நிறுவனம் மிகப்பெரிய அளவில் பலனடைந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது.

பட்டியலிலுள்ள முதல் 3 நபர்கள்:

போர்ப்ஸின் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில், மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் தொடர்ந்து 4வது முறையாக முதலிடத்தில் உள்ளார். கடந்த 23 ஆண்டுகளில் 18 ஆண்டுகளாக உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் பில்கேட்ஸ் முதலிடத்தில் உள்ளார்.

பில்கேட்ஸ்ஸின் சொத்து மதிப்பு 86 பில்லியன் டாலர். கடந்த ஆண்டில் பில்கேட்ஸின் சொத்து மதிப்பு 75 பில்லியன் டாலராக இருந்தது.

பில்கேட்ஸுக்கு அடுத்ததாக 2-வது இடத்தில் பிரிக் ஷிர் ஹாத்வே நிறுவனர் வாரன் பஃபே இருக்கிறார் இவரின் சொத்து மதிப்பு 75.6 பில்லியன் டாலர் ஆகும்.

மூன்றாவது இடத்தில், அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் பெசாஸ் உள்ளார். இவரின் சொத்து மதிப்பு 72.8 பில்லியன் டாலர்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இந்தப் பட்டியலில் 544வது இடத்தில் உள்ளார். அவரின் சொத்து மதிப்பு 3.5 பில்லியன் டாலர் ஆகும். ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் முதல் முறையாக 5-வது இடத்தை பிடித்துள்ளார். அவரின் சொத்து மதிப்பு கடந்த 12 மாதங்களில் 11.4 பில்லியன டாலர் அதிகரித்துள்ளது.

போர்ஃப்ஸ் வெளியிட்ட பட்டியலில் அதிக கோடீஸ்வரர்கள் கொண்ட நாடுகளில், 565 கோடீஸ்வரர்களைக் கொண்டு அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்திலும், சீனா (319), ஜெர்மனி (114) முறையே 2-வது மற்றும் 3-வது இடத்திலும் உள்ளன.

&-->வழக்கத்துக்கு மாறான, தீவிர தட்பவெப்ப நிலையும், ஆர்க்டிக் 'வெப்ப அலைகள்' தீவிர தாக்கம் ஏற்படுத்தும் என்று உலக வானிலை ஆய்வு அமைப்பு அறிக்கை ஒன்றில் எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத அளவில் வெப்ப அளவு உலகெங்கிலும் பதிவானதையடுத்து இந்த ஆண்டும் தீவிர தட்பவெப்ப நிலையே நீடிக்கும் என்றும் கடலில் பனிப்பாறைகளின் அளவு குறைந்து கடல் வெப்பம் தணியாது அதிகரிக்கும் என்றும் இந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

தொழிற்புரட்சிக்கு முந்தைய காலக்கட்டத்தைக் காட்டிலும் உலக வெப்ப அளவு 1.1பாகை அதிகரித்தது, கடல் நீர்மட்டம் இதுவரையில்லாத அளவு அதிகரித்துள்ளது, கடல் பனிப்பாறை 40 லட்சம் சதுர கிமீ பரப்பளவுக்கு உருகிக்கரைந்துள்ளது.

"வானவெளியில் செலுத்தப்படும் கரியமில வாயுவின் அளவு சீராக புதிய உச்சத்தை எட்டிக் கொண்டேயிருப்பதால் மானுட உற்பத்தி செயல்பாடுகளின் தாக்கம் வானிலை அமைவில் கடும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது தற்போது ஆதாரபூர்வமாக உறுதியாகியுள்ளது" என்று இந்த அமைப்பின் செயலர் தலாஸ் என்பவர் எச்சரித்துள்ளார்.

மேலும், "2017-ல் வலுவான எல் நினோ விளைவு இல்லையென்றாலும் பூவுலகில் ஏற்படும் மாற்றங்கள் வானிலை அமைப்பின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு நம் அறிவின் எல்லைகளுக்கு சவால் அளிக்கிறது" என்று உலக வானிலை ஆய்வு திட்ட இயக்குநர் டேவிட் கார்ல்சன் தெரிவித்துள்ளார். அதாவது, நாம் இப்போது ஆய்வு செய்ய முடியாத ஒரு நிலையில் உள்ளோம், விளைவுகளை கணிக்க முடியாத பிரதேசத்தில் இருக்கிறோம் என்றார்.

--->ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள இந்தியாவிலேயே மிக நீளமான சுரங்கப் பாதையை வரும் ஏப்ரல் 2-ம் தேதி பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஜம்மு - நகர் தேசிய நெடுஞ்சாலையில் 286 கி.மீ. தூரத்துக்கு நான்கு வழிப் பாதை அமைக்கும் பணி கடந்த 2011-ம் ஆண்டு மே மாதம் 23-ம் தேதி தொடங்கியது. இந்தத் திட்டத்துக்கு ரூ.3,720 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த நான்கு வழிச் சாலை பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்தச் சாலையின் ஒரு பகுதியாக நாட்டிலேயே மிக நீளமான சுரங்கப் பாதை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த சுரங்கப் பாதையால் ஜம்முவுக்கும் நகருக்கும் இடையில் 30 கி.மீ. தூரம் குறையும். மொத்தம் 9.2 கி.மீ. நீளத்துக்கு இருவழி சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "காஷ்மீர் மாநிலத்தில் செனானி நஷ்ரி இடையே கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதையை ஏப்ரல் 2-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார்" என்றார். அன்றைய தினம் நடக்கும் பொதுக் கூட்டத்திலும் மோடி உரையாற்றுகிறார்.

இந்தச் சுரங்கப் பாதை 1200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சுரங்கப் பாதையில் காற்றோட்டம், தீ தடுப்பு, சிக்னல்கள், தகவல் தொடர்பு மற்றும் மின்சாதனங்கள் அனைத்தும் தானாக இயங்கும் வகையில் இந்தியாவிலேயே முதலாவதாக உலகத் தரத்துடன் கட்டப்பட்டுள்ளது.

--->ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள 2016-ம் ஆண்டுக்கான மனித வள மேம்பாட்டு குறியீடு தரவரிசையில் இந்தியா 131-வது இடத்தில் உள்ளது. கடந்த 2014-ம் ஆண்டும் இந்தியா 131-வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவான ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பு (யுஎன்டிபி) வருடந்தோறும் மனித வள மேம்பாட்டு குறியீட்டு தரவரிசையை வெளியிட்டு வருகிறது. 2016-ம் ஆண்டுக்கான தரவரிசை பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. இந்த தரவரிசை பட்டியல் 2015-ம் ஆண்டு தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. 188 நாடுகள் அடங்கிய இந்தப் பட்டியலில் நார்வே நாடு முதலிடத்தை பிடித்துள்ளது. ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்தையும் சுவிட்சர்லாந்து மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது. இந்தியா 131-வது இடத்தை பிடித்துள்ளது. 2015-ம் ஆண்டு அந்நிய நேரடி முதலீடுகள் சாதகமாக இருந்த போதிலும் இந்தியாவின் மனித வள மேம்பாட்டு குறியீட்டு தரவரிசையில் பெரிதாக முன்னேற்றம் ஏற்படவில்லை.

இருப்பினும் 2014-15-ம் ஆண்டு தகவலின்படி இந்தியாவில் 63 சதவீதம் பேர் தற்போதைய வாழ்க்கை முறை திருப்திகரமாக இருப்பதாக நினைக்கின்றனர் என்று மனித வள மேம்பாட்டு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பு இந்த தரவரிசை பட்டியலில் இந்தியாவை நடுத்தர மனித வள மேம்பாட்டு நாடுகள் பிரிவில் வைத்துள்ளது. பாகிஸ்தான், பூட்டான், வங்க தேசம், கென்யா, மியான்மர், நேபாளம் போன்ற நாடுகளும் இந்தப் பிரிவில் உள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள தரவரிசை பட்டியலில் இந்தியாவின் மனித வள மேம்பாட்டு குறியீட்டு எண் 0.624-ஆக அதிகரித்துள்ளது. 2010-ம் ஆண்டு இந்தியாவின் மனித வள மேம்பாட்டு குறியீட்டு எண் 0.580-ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போதைய அறிக்கையின் படி இந்தியர்களின் வாழ்வு காலம் 68.3 வருடமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் நிகர தேசிய வருமானத்தில் தனிநபர் வருமானம் 5,663 டாலராக உள்ளது.

69 சதவீதம் பேர் இந்தியாவில் பாதுகாப்பாக வாழ்வதாக கூறியதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் 72 சதவீத பெண்களும் 78 சதவீத ஆண்களும் பாதுகாப்பாக வாழ்வதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமான வாழ்க்கை திருப்தி குறியீட்டுக்கு இந்தியாவுக்கு 10 மதிப்பெண்ணுக்கு 4.3 மதிப்பெண்கள் கிடைத்துள்ளன. அரசாங்கத்தை குறிப்பிடுகையில் 69 சதவீதம் பேர் இந்தியாவில் மத்திய அரசை நம்புவதாக தெரிவித்துள்ளனர். 74 சதவீதம் பேர் இந்திய

நீதிமன்ற அமைப்பை நம்புவதாக தெரிவித்துள்ளனர். மேலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியாவின் முதலீடு அதிகரித்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடு செய்து வருகிறது. அடுத்த 20 ஆண்டுகளுக்கு இந்த முதலீடு தொடரும் பட்சத்தில் நிகர வேலைவாய்ப்பு 1 கோடியாக அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

1990-ம் ஆண்டிலிருந்து சர்வதேச அளவில் மனிதவள மேம்பாடு கணிசமாக அதிகரித்து வருகிறது. ஆனால் வளர்ச்சி சரிசமமாக இருக்கவில்லை. முக்கியமாக பெண்கள், பழங்குடி மக்களில் மனித வள குறியீடு மேம்பாடு அடையவில்லை. தற்போது நிறைய மக்களுக்கு எளிதாக கல்வி, மருத்துவம், சுகாதார வசதிகள் கிடைக்கிறது. ஆனால் சில குறிப்பிட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை. அதற்கான காரணங்களையும் கிடைப்பதற்கு வழி களையும் ஆராய வேண்டும். முக்கியமாக பெண்களுக்கு பொருளாதார, அரசியல், சமூக, கலாசார தடைகளை படிப்படியாக களைய வேண்டும். ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் குறைந்த ஊதியமே கிடைக்கிறது. மேலும் வேலைவாய்ப்புகளும் குறைந்த எண்ணிக்கையிலேயே பெண்களுக்கு கிடைக்கிறது என்று மனித வள மேம்பாட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை, தகவல்கள் எளிதாக கிடைப்பது, வாழ்வதற்குரிய வசதிகள் எளிதாக கிடைப்பது ஆகிய மூன்று அடிப்படையான மதிப்பீடுகளை வைத்து மனித வள மேம்பாட்டு குறியீடு கணக்கிடப்படுகிறது.

Ø இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் முதலாவதாக இந்தியாவிலேயெ தயாரிக்கப்பட்ட இரயில் மேதா மும்பை தாதர் ரயில் நிலையத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

Ø மூன்று நாள் சர்வதேச புத்தமத மானாடு பிகாரின் ராஜகிருதத்தில் நடைபெற்றது. ராஜகிருதத்தில் முதல் புத்தசமய மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

Ø ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள சஞ்சீலி காவல் நிலையம் குற்ற மற்றும் குற்றவாளிகள் வலையமைப்பைக் கொண்ட இந்தியாவின் முதல் காவல் நிலையம் ஆகும்.

Ø இந்தியா உலக ஆற்றல் கட்டமைப்பு செயல்பாட்டு குறியீட்டில் 87 வது இடம் பெற்றுள்ளது,

Ø வானிலை ஆராய்ச்சியாளர் சிக்கா காலமாகினார். முதல் முறையாக எல் நினோவிற்கும் இந்தியாவின் பருவமழைக்கும் தொடர்பு உள்ளது என்பதைக் கண்டறிந்தவர் ஆவார்.

Ø மத்திய இந்திய மருத்துவக் கவுன்சிலை மறுசீராய்வு செய்வதற்காக அரவிந்த பனகாரியா தலைமையில் உயர் நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

Ø ஆட்சியாளர்களை அரவணைத்துப் போவது ஊடக தர்மம் ஆகாது என்று பத்திரிகை கவுன்சில் தலைவர் நீதிபதி சி.கே.பிரசாத் தெரிவித்துள்ளார்.

Ø தமிழகத்தில் அம்மா உணவகம் செயல்படுவது போல பெங்களூரில் 198 வார்டுகளிலும் 'நமது உணவகம்' தொடங்கப்படும் என கர்நாடக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

Ø மேஜர் ரோகித் சவுத்ரிக்கு கீர்த்தி சக்ரா விருது வழங்கப்பட்டுள்ளது.

Ø நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான ஐ.சி.ஐ.சி.ஐ., கிராமப்புற வாடிக்கையாளர்களுக்கான 'மேரா ஐமொபைல்' என்ற புதிய செல்லிடப்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

Ø இந்தியாவின் முதல் தனியார் நகரமான குஜராத்தில் உள்ள ஹாசிரா பணமில்ல தனியார் நகரமாக மாறியுள்ளது.

Ø மருத்துவ பாதுகாப்பில் விபத்தில்லா மருத்துவம் தொடர்பாக சர்வதேச பூஜ்ய மாநாடு டெல்லியில் நடைபெற்றது.

Ø வாழை ஆராய்ச்சி மையம் பிகாரில் உள்ள வைசாலியில் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Ø மகி எனப்படும் பழங்கால மை அஸ்ஸாம் மானிலத்தில் முற்காலத்தில் பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Ø ஆசியாவிலேயே முதல்முறையாக விமானிகள் பயிற்சி மையத்தை ஏர்பஸ் நிறுவனம் தேசிய தலைநகர் தில்லியில் அமைக்க உள்ளது.

Ø இந்திய கடற்படைத் தளபதி சுனில் லாம்பாவை, ரஷிய கடற்படைத் தளபதி விளாதிமிர் கோரோல்வ் தில்லியில் சந்தித்துப் பேசினார்.

Ø அமெரிக்காவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமூல் தாப்பரை நியமித்து அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டார்.

Ø அமெரிக்க அரசின் மருத்துவ சுகாதாரத் துறையில், முக்கியத்துவம் வாய்ந்தப் பிரிவின் தலைவராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீமா வர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

Ø இரத்தப் பரிசோதனையின் மூலம ஆட்டிசம் நோயை கண்டுபிடிக்கும் கருவியை அமெரிக்க விஞ்சானிகள்

கண்டுபிடித்துள்ளனர்.

Ø சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையம் உலகின் மிகச்சிறந்த விமான நிலையாமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Ø சீனா, இப்போது உலகின் மிகப்பெரிய காஸ்மிக் கதிர் கண்காணிப்பு மையம் கட்டுவதற்கான பணியைத் தொடங்கி உள்ளது. தென்மேற்கு சீனாவின் சிச்சு வான் மாகாணத்தில் கடல் மட்டத் திலிருந்து 4,410 மீட்டர் உயரத்தில் உள்ள மலைப்பாங்கான பகுதியில், 'லார்ஜ் ஹை ஆல்டிடியூட் ஏர் ஷவர் ஆப்சர்வேட்டரி' என்ற பெயரில் இந்த மையம் கட்டப்பட்டு வருகிறது

Ø 155 நாடுகளில் நடத்தப்பட்ட இந்த கருத்துக்கணிப்பின்படி நார்வே அரசு தனது மக்களை மகிழ்சியாக வைத்துக்கொள்வதில் அக்கறை செலுத்தியதால், நான்காம் இடத்திலிருந்து முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்த வரிசையில் இந்தியா 122-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. பாகிஸ்தான் 80-வது இடத்தையும், நேபாளம் 99-வது இடத்தையும், இலங்கை 110-வது இடத்தையும் பெற்றுள்ளது

Ø புளூட்டோவை மீண்டும் கிரகமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. கூடுதல் தகவல்

கடந்த 1930-ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட பிறகு, சூரிய குடும்பத்தில் ஒன்பதாவது கிரகமாக புளூட்டோ கருதப்பட்டு வந்தது. இந்த நிலையில், அதைவிட 27 சதவீத அளவு பெரிய கோளான எரிஸ், சூரிய குடும்பத்தையடுத்துள்ள பகுதியில் இருப்பதை 1992-இல் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இதையடுத்து, கிரகம் என்றால் என்ன என்பதற்குப் புதிய விளக்கத்தை சர்வதேச விண்வெளி விஞ்ஞானிகள் அமைப்பு வெளியிட்டது. கிரகத்தைச் சுற்றி வரும் துணைக்கோள், கிரகம் சூரியனைச் சுற்றி வரும் பாதை உள்ளிட்டவை தொடர்பான விளக்கமும் வெளியிடப்பட்டது. அதன்படி புளூட்டோ முழு அளவிலான கிரகம் அல்ல என்று விஞ்ஞானிகள் 2006-இல் அறிவித்தனர்.

Ø இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் பட்டம் வென்றார். இது, இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் அவர் பெறும் 5-ஆவது பட்டமாகும்.

Ø முன்னாள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கேல் கிளார்ஜ் தனது கதை எனும் சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.

Ø 2022-ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்தில் ஏற்கெனவே அதிகபடியான நாடுகள் களம் கண்டுள்ளதால், அதில் இந்தியா பங்கேற்பதில் பலனில்லை என்று இந்திய ஒலிம்பிக் சங்கத் (ஐஓஏ) தலைவர் ராமச்சந்திரன் கூறியுள்ளார

Ø சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய சுழற்பந்துவீச்சாளர் ரவீந்திர ஜடேஜா, சக நாட்டவரான அஸ்வினை பின்னுக்குத்தள்ளி முதலிடம் பிடித்துள்ளார்.அதேபோல், இந்திய வீரர் புஜாரா, பேட்ஸ்மேன்களுக்கான பட்டியலில் 2-ஆவது இடத்துக்கு முதல் முறையாக முன்னேறியுள்ளார்.

Ø சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) சேர்மன் சஷாங்க் மனோகர் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

Ø விஜய் ஹசாரே டிராபி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெங்கால் அணியை 37 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தமிழக அணி சாம்பியன் ஆனது.

Ø உலக வானிலை தினம் – மார்ச் -23

மார்ச் - 24 உலக காசநோய் தினம்

கருப்பொருள் -- Unite to End TB

.காசநோய் ஒழிப்பிற்காக மத்திய சுகாதார அமைச்சகம் #India vs TB, TB- Free India என இரு பிரச்சார இயக்கங்களை துவங்கியுள்ளது.

.India vs TB பிரச்சார இயக்கத்தின் முழக்கம் -- #India vs TB symbolizes India's fight against TB

TB - Free India பிரச்சார இயக்கத்தின் முழக்கம் -- TB Harega, Desh Jeetega

TB - Free India பிரச்சார இயக்கத்தின் தூதுவராக அமிதாப்பச்சன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# சமுதாய மற்றும் கல்விதரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான தேசிய ஆணையம்(National Conmission for Socially and Educationally Backward Classes- NSEBC) அமைக்க மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது

- இந்த ஆணையம் மத்திய சமுகநீதி மற்றும் அதிகாரமளித்தல்(Ministry of Social justice and Empowerment) துறையின் கீழ் உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கான ஆணையத்திற்கு(National Commission for Backward Classes) மாற்றாக வர உள்ளது

- மேலும் புதிதாக வர உள்ள NSEBC ஆணையம் அரசியலைமைப்பு சார்ந்த அமைப்பாக(Constitutional Body) உருவாக்க சரத்து 338B என்ற புதிய சரத்து உருவாக்கப்பட உள்ளது

குறிப்பு: Art-338- National Commission For SC

- Art 338A- National Commission for ST

# 6வது தேசிய போட்டோகிராபி விருதுகளில் "Raghu Rai" என்பவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது

# 2017ம் ஆண்டிற்கான "Earth hour" நேற்று(மார்ச் 25) இரவு 8.30மணி முதல் 9.30 வரை கடைபிடிக்கப்பட்து

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை "Earth hour" புவி வெப்பமயமாதலை தடுக்க அனுசரிக்கப்படும்

# அண்டார்டிகாவில் உள்ள பனிபாறைகளின் மேற்புற திசைவேகத்தை(Surface Velocity) அறிய அங்கு பொருத்தப்பட்டுள்ள DGPSல் மின்தரவுகளை(Stakes) பொருத்த ISRO 4 குழுக்களை அனுப்பியுள்ளது

- இந்த குழுக்கள் அண்டார்டிகாவில் உள்ள இந்திய ஆராய்ச்சி மையங்களான "Bharathi மற்றும் Maitri"ல் இந்த புதிய மின்தரவுகள பொருத்தும்

- DGPS- Differential Global Positioning System

# 2017ம் ஆண்டிற்கான " Abel Prize" பிரெஞ்ச் கணித மேதை "Yves Meyer" க்கு வழங்கப்பட்டுள்ளது

# பாகிஸ்தான் தினத்தை முன்னிட்டு முதன் முறையாக சீனா,சவுதி மற்றும் துருக்கி படைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெறும் அணிவகுப்பில் பங்கேற்க உள்ளன

# எவரெஸ்ட் செல்லும் Indian Navyன் இரண்டாவது பயணம் தொடங்கியது

# தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தின்(National Dairy Development Board) 50வது ஆண்டு விழாவை முன்னிட்டு "50 years- The great Indian Milk Reveloution" என்ற புத்தகத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் வெளியிட்டுள்ளார்

# உலகின் மிகப்பெரிய செயற்கை சூரிய அமைப்பு(Artificial sun set) ஜெர்மனியின் Cologneல் உருவாக்கப்பட்டுள்ளது

- கார்பன் பயன்பாடு(Carbon-Neutral) இல்லாமல் ஹைட்ரஜன் தயாரிக்க இந்த செயற்கை சூரிய அமைப்பு பயன்படும்

# 67% திறம்பட செயல்படும் புதிய வகை ரோட்டோ வைரஸ் மருந்தினை ஆப்ரிக்க நாடானா "Niger"ல் சோதனை முறையில் அறிமுகப்படுத்தியுள்ளனர்

- இந்த மருந்திற்கு "BRV-PV" என பெயரிட்டுள்ளனர்

- இதனை "Serum Institute of India" நிறுவனம் உருவாக்கியுள்ளது

# ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் உள்ள "Bakshi கால்பந்து மைதானம்" FIFA விதிமுறைகளுக்கு உட்பட்டு புதிதாக மேம்படுத்தப்பட உள்ளது

# கர்நாடகவின் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீரை சேமித்தல் மற்றும் அதனை திறம்பட செலவழித்தல் தொடர்பான குறைந்த விலை தொழில்நுட்பங்களுக்கு "NABARD" வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது

# "Rashtriya Vasoshri Yojana"

- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மூத்த குடிமகன்களுக்கு வாழ்வதற்கு தேவையான உபகரணங்கள் உடற்சார்ந்த உதவிப்பொருட்கள் லழங்கும் மத்திய அரசின் திட்டம் எப்ரல் 1,2017 முதல் தொடங்கப்பட உள்ளது

- ஆந்திர மாநிலம் நெல்லூரில் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது

# புலம் பெயர்ந்தோருக்கு அமெரிக்காவில் வழங்கப்படும் உயரிய குடிமகன் விருதான "Ellis Island Medal of Honour" ற்கு இந்த்யாவில் இருந்து 6 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்

# விமானம்தாங்கி கப்பலான "INS Vikramaditya" கப்பலில் இருந்து பாரக் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது

- Barak ஏவுகணை ஒரு தரையிலிருந்து வான்வெளியில்(Surface-to-air) தாக்கும் ஏவுகணையாகும்

# ஆசிய வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின்(Asian Development Research Institute) வெள்ளி விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக "பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநாடு"(Conference on Bihar and Jharkhand) பாட்னாவில் நடைபெற்றது

- இதனை குடியரசுத் த்லைவர் ப்ராணப் முகர்ஜி தொடங்கி வைத்து பேசினார்

- இம்மாநாட்டின் கரு(Theme): "Shared History to Shared Vision"

# மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு துறையின்(Ministry of Environment and Climate Change-MoEF) கீழ்

செயல்படும் சட்டப்பூர்வ அந்தஸ்து பெற்ற "இந்திய விலங்குகள் நல வாரியம்" (AWBI)தற்போது ஜல்லிக்கட்டு போராட்டங்களுக்கு பின் மூத்த MoEF அதிகாரியின் கீழ் செயல்பட உள்ளது

- AWBI- Animal Welfare Board Of India

# The National Helicopter Operator Pawn நிறுவனம் "DELHI DARSHAN RIDES" என்ற புதிய சேவையை தொடங்கியுள்ளது

- இதில் 2500 ரூபாயிலிருந்து சேவைகள் தொடங்கப்படும்

# ஆந்திரா: Jan dhan வங்கி கணக்குகளை ஆதார் அட்டையுடன் அதிகமாக இணைத்த மாநிலமாக உள்ளது

# பசுந்தீவனங்களை காற்று புகாமல் பாதுகாக்கும் 10MT(Megaton) அளவிலான அமைப்புகளை(Silos) 2019-20 இறுதிக்குள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

# "Tanushree Pareek": 51 ஆண்டு BSF வரலாற்றில் முதல் பெண் போர் அதிகாரி(Combat Officier) என்ற பெருமையை பெற்றுள்ளார்

# March 25- International Day of Remembrance of the Victims of Slavery and the Transatlantic Slave Trade

# MARCH 25- International Day of Solidarity with Detained and Missing Staff Members

# MARCH 26- Independence Day and National Day of Bangladesh

***ராயலசீமா மாவட்டங்களில் வறட்சியைப் போக்க கோதாவரி நதியின் மீது 173 நாட்களில் கட்டப்பட்ட பட்டிசீமா அணைக்கட்டு லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

கோதாவரி நதியையும், கிருஷ்ணா நதியையும் இணைக்கும் முயற்சியில் வெற்றி கண்டவர் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு. கோதாவரி நதியிலிருந்து சுமார் 3 ஆயிரம் கன அடி தண்ணீர் கடலில் கலந்து வீணாகிறது. இதைத் தடுக்கவும் ராயலசீமா பகுதியின் வறட்சியைப் போக்கவும் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் ‘பட்டிசீமா’ அணைக்கட்டை கட்ட ஆந்திர அரசு முடிவு செய்தது. இதன்படி கடந்த 2015-ம் ஆண்டு தொடங்கிய இந்த அணையின் கட்டுமானப் பணி, வெறும் 173 நாட்களில் முடிக்கப்பட்டது. இதன் மூலம் போலாவரம் அணை கட்டி முடிக்கப்பட்ட பின்னர் ஆந்திராவிலேயே மிகவும் வறண்ட பகுதியாகக் கருதப்படும் ராயலசீமாவுக்கு தண்ணீர் விநியோ கம் செய்யப்பட உள்ளது. இதனிடையே, மிகக்குறை வான காலத்தில் கட்டி முடிக்கப் பட்ட அணையாக, பட்டிசீமா லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த தகவலை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு சமூக வலைதளத்தில் நேற்று தெரிவித்தார்.

***இந்திய டெஸ்ட் அணியில் 288-வது வீரராக நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் குல்தீப் யாதவ் அறிமுகமானார். இவர் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மேலும் சர்வதேசப் போட்டியில் விளையாடும் முதல் இந்திய சைனாமேன் வகை பந்துவீச்சாளர் என்கிற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

துபாயில் நடைபெற்ற சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டியில் இந்தியா 5 தங்கம் உள்ளிட்ட 13 பதக்கங்களை கைப்பறியுள்ளது.இந்தியாவின் சுந்தர் சிங் குர்ஜார் , குண்டு எறிதல், வட்டு எறிதல், ஈட்டி எறிதல் ஆகியவற்றில் 3 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.மகளிர்க்கான சக்கர நாற்காலி குண்டு எறிதலில் இந்தியாவின் கரம்ஜோதி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

***எல்லை பாதுகாப்பு படையின் ( BSF) முதல் பெண் அதிகாரியாக பொறுப்பேற்ற தனுஸ்ரீ பாரீக் , தற்போது BSFன் தாக்குதல் படை பிரிவின் முதல் பெண் அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார்.

நியூட்ரினோ திட்டம் என்றால் என்ன?:

உலகம் முழுவதும் நியூட்ரினோ (அணுத்துகள்) சக்தி பரவி உள்ளது. சுமார் நூறாயிரம் கோடி நியூட்ரினோக்கள் ஒவ்வொரு விநாடியும் நமது உடலுக்குள் புகுந்து வெளியேறிய வண்ணம் உள்ளன. இந்த அணுத் துகளை ஆய்வு செய்தால் சூரியன் குறித்த ரகசியங்களையும், விண்வெளியின் ஆற்றல் பற்றியும் பூமியின் பிறப்பு குறித்தும் தெரிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் நியூட்ரினோ ஆய்வு முயற்சி 1930களில் இருந்து தொடங்கியது.

இதேபோல, இந்தியாவில் முதல் முதலாக காஸ்மிக் கதிர்களில் இருந்து உண்டாகும் நியூட்ரினோக்கள், கோலார் தங்க வயல் சுரங்கத்தில், 1965-இல் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், அச்சுரங்கங்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டன. எனவே, இந்த ஆராய்ச்சியை மீண்டும் நடத்துவதற்காக இந்திய நியூட்ரினோ அறிவியல் கூடம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு மையம், தமிழ்நாட்டில் தேனி மாவட்டம் தேவாரம் அருகேயுள்ள பொட்டிபுரம் எனும் ஊரிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் உள்ளே அமைக்கப்படுகிறது. மலையின் உச்சியில் இருந்து 1.3 கி.மீ. கீழே, மலையின் அடிவாரத்தில் 2.5 கி.மீ., தொலைவுக்கு சுரங்கப் பாதை தோண்டப்படும். அதையடுத்து, பெரிய ஆய்வுக் கூடம் அமைக்கப்படும். அங்கு 50 டன் எடையுள்ள இரும்பினாலான நியூட்ரினோ காணும் கருவி (டிடெக்டர்) அமைக்கப்படும். இதைச் சுற்றி, நான்கு திசைகளிலும் மேலேயும் கீழேயும் குறைந்தபட்சம் ஒரு கி.மீ. பரிமாணமுள்ள பாறை இருந்தால்தான், ஆராய்ச்சி நடத்த

முடியும். இவ்வளவு பெரிய பாறையால்தான், வானவெளியில் இருந்து வரும் காஸ்மிக் கதிர்களை தடுத்து, நிறுத்த முடியும். அதன் பிறகுதான், நியூட்ரினோவை காண முடியும். முதல்கட்டமாக ஐ.என்.ஓ. கூடத்தில், காஸ்மிக் கதிர்கள் உண்டாக்கும் நியூட்ரினோக்களைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்படும்.

Ø தாய்மை அடைந்த பெண்களுக்கு ஆறு மாதம் பேறுகால விடுமுறை அளிக்க வகை செய்யும் பேறுகாலப் பலன்கள் மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

மசோதாவின் முக்கிய அம்சங்கள்

ü 1961-ஆம் ஆண்டின் பேறுகால நலன்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இந்த மசோதா வழிவகை செய்கிறது

ü பெண்களுக்கான பேறுகால விடுப்புக் காலத்தை 12 மாதங்களில் இருந்து 26 மாதங்களாக அதிகரிக்க மசோதா வகை செய்கிறது.

Ø நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்ட போர்களின்போது பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கு சென்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துகளை வாரிசுகள் உரிமை கொண்டாட முடியாத வகையில் சில கூடுதல் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் எதிரி சொத்து சட்டத் திருந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

Ø மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி, கூடுதல் பொறுப்பாக பாதுகாப்புத் துறை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

Ø பார்த்தா முகாபாத்யா குழு உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு நலத்திடடங்கள் போன்றவற்றை வழங்குவதற்கு ஏதுவாக சட்டம் வகுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Ø இந்தியாவின் மிகப்பெரிய கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நிலையம் டெல்லியில் வெங்கையா நாயுடுவால் திறந்து வைக்கப்பட்டது.

Ø அசாம் அரசாங்கம் 8 வரை அனைத்து மாணவர்களுக்கும் சமஸ்கிருதம் கட்டாயமாக கற்பிக்கப் படவேண்டுமென அம்மானில அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளாது.

Ø கோவாவின் புதிய முதல்வராக மனோகர் பாரிக்கர் பதவியேற்றுள்ளார்.

கூடுதல் தகவல்

ü தலை நகரம் – பானஜி

ü 1961 ல் ஆபரேசன் விஜய் மூலம் போர்த்துக்கீசியரிடமிருந்து பெறப்பட்டது

ü கொங்கனி, மராத்தி ஆகியவை பிராதான மொழிகள்.

Ø இந்தியாவிலேயே முதல்முறையாக மிதக்கும் சூரிய சக்தி மின் நிலையம் கேரளாவில் காயம்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

Ø மேற்குவங்க அரசாங்கம் குருக் எனப்படும் பழங்குடியின மக்களின் மொழியை அம்மானில அரசு அலுவல் மொழிகளில் ஒன்றாக சேர்த்துள்ளது.

கூடுதல் தகவல்

ü குருக் மொழி திராவிட மொழிக்குடும்ம்பத்தை சார்ந்த மொழியாகும்.

ü ஒரான் எனும் பழங்குடியின மக்கள் குருக் மொழியை பேசுகின்றனர்.

ü இம்மொழி 16 லட்சம் மக்களால் பேசப்படுகிறது.

ü யுனெஸ்கோவினால் அழிந்துவரும் மொழிகளில் ஒன்றாக குருக் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Ø ஒலியைவிட வேகமாக பாயக்கூடிய பிரம்மோஸ் ஏவுகணை, ஒடிஸாவின் பாலாசோர் சோதனைத் தளத்தில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

கூடுதல்

1. இந்தியாவும், ரஷியாவும் கூட்டாக உருவாக்கிய பிரம்மோஸ் ஏவுகணை, ஒலியின் வேகத்தைப் போல் 2.8 மடங்கு அதிக வேகத்தில் பாய்ந்து சென்று, இலக்குகளை அழிக்கவல்லது. தாழ்வாகப் பறந்து செல்லும் 'குரூஸ்' வகையைச் சேர்ந்த உலகின் மிக வேகமான ஏவுகணையான இது, 300 கிலோ எடை கொண்ட வெடிபொருளை சுமந்து சென்று குறுகிய தொலைவு இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கக் கூடியது.

2. 450 கிலோமீட்டர் தொலைவு சென்று இலக்கைத் தாக்கி அழிக்கும் பிரமோஸ் ஏவுகணை

3. பிரமோஸ் ஏவுகணையை இந்தியா சில ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிகரமாக சோதனை செய்தது. பின்னர் 'ஏவுகணை தொழில்நுட்ப கட்டுப்பாட்டு குழுமத்தில்' இந்தியா ஜூன் 2016-ல் உறுப்பினரானது.

Ø நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி சி.எஸ். கர்ணனுக்கு ஜாமீனில் வரக்கூடிய பிடி ஆணையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது.நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், பணியில் இருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு உச்ச நீதிமன்றம் பிடிஆணை பிறப்பித்துள்ளது இந்திய நீதித் துறை வரலாற்றிலேயே இது முதல் முறையாகும்.

Ø ஐந்து மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில், கோவாவில்தான் அதிகம் பேர் 'நோட்டாவை' (எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை) தேர்வு செய்துள்ளனர்

Ø உயிரித்தொழிநுட்ப புத்தாக்க மையம் பெங்களூருவில் அமைக்கப்பட உள்ளது.

Ø ஆபரேசன் சேவா கர்மா என்பது ஆமைகளை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும்

Ø எண்களும் பொய்சொல்லும் எனும் நூலினை முன்னாள் கிரிக்கெட் வீரர் ஆகாஸ் சோப்ரா எழுதியுள்ளார்.

Ø திருப்பதி விமான நிலையத்திற்கு ஸ்ரீ வெங்கடேஷ்வரா நிலையம் என புதிய பெயரை அம்மானில அரசாங்கம் சூட்டியுள்ளது.

Ø வீரேந்திரகுமார் 30வது மூர்த்தி தேவி விருதினைப் பெற்றுள்ளார்.

Ø மெட்ரோ வழித்தடம் அமைக்கும் பணியில் ஒரே மாதத்தில் "யு' வடிவிலான 200 கர்டர்களை நிறுவியதன் மூலம் லிம்கா சாதனைப் புத்தகத்தில் தில்லி மெட்ரோ ரயில் நிறுவனம் (டிஎம்ஆர்சி) இடம் பிடித்துள்ளது

Ø ரயில் நிலையங்களில் உணவகங்கள் நடத்துவதற்கு மகளிருக்கு 33 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கும் புதிய கொள்கை மார்ச் 8 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

Ø ரஃபேல் போர் விமானங்கள் வருகிற 2019-ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையில் சேர்க்கப்படும் என விமானப் படைத் தளபதி பி.எஸ்.தனோவா கூறினார்.

Ø சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு, "பெண் சக்தி' விருதுகளை குடியரசுத்தலைவர் வழங்கினார்.

கூடுதல் தகவல்

ü தமிழகத்தைச் சேர்ந்த 98 வயது யோகாசன கலைஞர் நாணம்மாள் உள்பட 31 பெண்களுக்கு விருதுகளை வழங்கினார்

ü கேரளத்தில் கடந்த 1975-ஆம் ஆண்டில் இருந்து முழுக்க முழுக்க பெண்களால் நடத்தி வரப்படும் கதகளி நடனக் குழுவினரும் விருது பெற்றனர்.

ü இஸ்ரோவின் சந்திரயான், மங்கள்யான் மற்றும் ஒரே ராக்கெட்டில் 104 செயற்கை கோள்கள் ஏவப்பட்டது உள்ளிட்ட சாதனைத் திட்டங்களில் பங்காற்றிய சுபா வாரியர், பி.கோடாநான்யகய், அனட்டா சோன்னே ஆகிய 3 பெண் விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கப்பட்டது.

Ø உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் ஐ.நா. மகளிர் சபையுடன் இந்தியா மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

Ø வைகோம் விஜயலட்சுமி தொடர்ந்து 5 மணி நேரம் வீனை இசைத்து புதிய சாதனை படைத்தார்.

Ø தன்றீர் புரட்சி பிரச்சாரம் டெல்லியில் நடைபெற்றது.

Ø இந்தியா நேபாளம் கூட்டு இராணுவப் பயிற்சி சூர்யா கிரண் உத்தரகாண்டில் துவங்கியது.

Ø இந்தியாவின் முதல் இணையத்தின் மூலம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும் புதிய வசதியை எச்.டி.எப்.சி வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

Ø ஹிமாசலப் பிரதேசத்தில் இந்தியா-ஓமன் நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி அல் நாகாக் -2 நடைபெற்றது

Ø கர்னாடாக அரசு பிரதிம்பா எனும் இனையதளச்சேவையை தொடங்கியுள்ளது. இது அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும்.

Ø கொங்கனி எழுத்தாளர் மாகபலேஸ்வ்ரர் சாய் 2016 ஆம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மான் விருதினைப் பெற்றுள்ளார். ஹவுதான் என்ற நாவலுக்காக இவ்விருது கிடைத்துள்ளது.

Ø இந்தியாவிலேயே முதல் முறையாக ஐடிஎப்சி வங்கி ஆதாரை அடையாளமாகக் கொண்டு ஊதியம் வழங்கும் திட்டத்தை துவங்கியுள்ளது.

Ø உலகின் வயதான விமானம் தாங்கி கப்பலான இந்தியாவின் ஐஎன்எஸ் விராட் இன்று மார்ச் 6ம் தேதி ஒய்வுபெற்றது.

கூடுதல் தகவல்

ü ஐ.என்.எஸ். வீராட் இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் எனும் பெருமையைப் பெற்றதாகும்.

ü இக்கப்பல் 1943ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்தினால் உருவாக்கப்பட்டது. 30 ஆண்டுகளாக இந்தியக்கடற்படை பாதுகாப்புப் பணிகளுக்கு பயன்பட்டு வந்தது.

ü கடந்த 1959-ஆம் ஆண்டிலிருந்து 1984 வரை பிரிட்டிஷ் கடற்படையில் 'ஹெச்எம்எஸ் ஹெர்ம்ஸ்' என்ற பெயரில் இருந்த 'ஐஎன்எஸ் விராட்', அர்ஜென்டினாவுடன் பிரிட்டன் மேற்கொண்ட போரில் வெற்றிபெற பக்கபலமாக விளங்கியது.

ü உலகின் மிகச் சிறந்த விமானம் தாங்கி கப்பல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 23 ஆயிரத்து 900 டன் எடை கொண்ட இந்த கப்பல் 226.5 மீட்டர் நீளமும், 49 மீட்டர் அகல மும் கொண்டது. இந்த விமானத் தில் இருந்து ஒரே நேரத்தில் 18 விமானங்கள் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ü ஆந்திர மாநில அரசு வீராட் கப்பலை வாங்கி விசாகப்பட்டினத்தில் நிறுத்தி மியூசியமாக மாற்றும் திட்டமின்றை அறிவித்துள்ளது.

Ø பஞ்சாப் மாநிலம், அட்டாரி அருகே உள்ள இந்திய-பாகிஸ்தான் எல்லையில், நாட்டிலேயே மிகப் பெரியதாகக் கருதப்படும் மூவர்ணக் கொடி, மிக உயரமான கம்பத்தில் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

Ø மத்திய நீர் ஆணையத்தின் தலைவராக நரேந்திர குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

Ø இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் மார்ச் 7 நடைபெற்ற இந்தியப் பெருங்கடல் மண்டல நாடுகள் சங்கத்தின் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரி பங்கேற்றார். இந்தியப் பெருங்கடலையொட்டிய இந்தியா, வங்கதேசம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 21 நாடுகள் அங்கம் வகிக்கும் சர்வதேச அமைப்புதான் இந்தியப் பெருங்கடல் மண்டல நாடுகள் சங்கம் (ஐஓஆர்ஏ).

Ø "நாகா அமைதி ஒப்பந்தத்தால் அஸ்ஸாம் மாநிலத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என மத்திய அரசு உறுதியளிக்க வேண்டும்" என அந்த மாநில முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான தருண் கோகோய் கேட்டுக் கொண்டார்.

கூடுதல் தகவல்கள்

நாகாலாந்தில் நிலவிவந்த கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, மத்திய அரசுக்கும், நாகாலாந்து தேசிய சோஷலிச கவுன்சிலுக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

Ø வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா, இந்தியாவுக்கு வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் தேதி அரசு முறை சுற்றுப்பயணமாக வருகை தரவுள்ளார்.

Ø ஐரோப்பிய யூனியனைவிட்டு பிரிட்டன் வெளியேறும் பிரெக்ஸிட் மசோதாவில் நாடாளுமன்ற மேலவை செய்த திருத்தங்களை நிராகரித்து கீழவை ஒப்புதல் அளித்தது

Ø ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான தென் கொரிய அதிபர் பார்க் கியூன்-ஹையை பதவி நீக்கம் செய்த நாடாளுமன்ற நடவடிக்கையை அந்நாட்டின் அரசியல் சாசன சிறப்பு நீதிமன்றம் உறுதி செய்தது.இவர் அந்த நாட்டின் முதல் பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

Ø எனவோ எனும் புயல் மடகாஸ்கார் தீவினைத் தாக்கியுள்ளது.

Ø ஹிந்துக்கள் திருமணம் தொடர்பான திருத்தப்பட்ட மசோதா பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

Ø இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்கள் சிலர் ஒன்றிணைந்து "மறுசீரமைக்கப்பட்ட ஐக்கிய விடுதலைப் புலிகள் முன்னணி' எனும் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளனர்.

Ø சர்வதேச அழகின் ராணி -2016 ஆக தாய்லாந்து நாட்டைச் சார்ந்த சிரட்ஜையா ஸ்ரீமாங்கெல்வின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

Ø துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான பிரிட்டனின் ஆன்டி முர்ரே சாம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் அவர் தனது டென்னிஸ் வாழ்க்கையில் 45-ஆவது பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். துபை ஓபனில் பட்டம் வென்ற முதல் பிரிட்டன் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள வீரர் முர்ரே

Ø இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தில் (பிசிசிஐ) லோதா கமிட்டியின் பரிந்துரைகள் அனைத்தும் அடுத்த 4 அல்லது 5 மாதங்களில் முழுமையாக அமல்படுத்தப்பட்டுவிடும் என பிசிசிஐ நிர்வாகக் குழு தலைவரும், முன்னாள் சிஏஜி தலைவருமான வினோத் ராய் தெரிவித்துள்ளார்.

Ø இந்தியாவில் அதிவேக 200 டெஸ்ட் விக்கெட்டுகள் அஸ்வின் சாதனை

Ø அயர்லாந்து நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச கராத்தே போட்டியில் கலந்து கொள்ளச் செல்கிறார், சிவகாசியில் உள்ள தனியார் பள்ளியில் 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் ஜி.அசோக்குமார். இவர் ஒருவர் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ள தமிழகத்திலிருந்து செல்கிறார்.

Ø 2017 ஆம் ஆண்டு பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் தூதுவராக சச்சின் டெண்டுலக்ர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

Ø ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியாவின் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

Ø ஜெனீவா சர்வதேச மோட்டார் வாகன கண்காட்சியில் டாடா மோட்டார்ஸ் தனது புதிய ஸ்போர்ட்ஸ் ரக காரை காட்சிப்படுத்த தயாராகியுள்ளது.

Ø வறட்சியை எதிர்கொள்வதற்கு நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் குடிமராமத்துத் திட்டப் பணிகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி (மார்ச் 13) காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலத்தில் தொடங்கி வைத்தார்

Ø சுவாமி விவேகானந்தர் எழுச்சி உரையாற்றிய கும்பகோணத்தில் ரயில்வே அருங்காட்சியகம் அமைக்கப்படும் என ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபாகர் பிரபு தெரிவித்தார்.

கூடுதல் தகவல்கள்

சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகருக்குச் சென்று திரும்பி வந்த பின்பு கும்பகோணம் ரயில் நிலையத்தில் அவர் முழங்கிய மிக முக்கிய எழுச்சிமிகு உரையான "எழுமின், விழுமின் என்ற உரையை நினைவுகூரும் வகையில் இங்கு அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

Ø முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவைத் தொடர்ந்து ஆர்.கே. நகர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு வரும் ஏப்ரல் 12ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. ஆர்.கே. நகர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலராக பத்மஜா தேவி நியமிக்கப்பட்டுள்ளார். எம்.சி. சேகர், மதன்பிரபு ஆகியோர் உதவி தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

Ø நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், சென்னையை சேர்ந்த நீதிபதி கர்ணனுக்கு உச்ச நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்துள்ளது.

Ø புதுவையை அடுத்த ஆரோவில்லில் சர்வதேச குதிரையேற்ற போட்டிகள் நடைபெற்றன.

Ø அதிமுக துணைப்பொதுச்செயலாளர் பெண்கள் தினத்தை முன்னிட்டு அம்மாவின் அரன் எனும் செயலியை வெளியிட்டுள்ளார்,

Ø உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் மாநிலமாக தமிழகம் 3வது முறையாக தொடர்ந்து முதலிடம் பிடித்துள்ளது.

Ø ஜல்லிக்கட்டுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விவரங்களை அறிந்திருந்தால் அவற்றைத் தெரிவிக்கலாம் என விசாரணை ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

Ø தமிழகத்தில் 1.4 கோடி குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

கூடுதல் தகவல்கள்

தமிழகம், கர்நாடகம், புதுச்சேரி உள்ளிட்ட ஆகிய 5 மாநிலங்களில் முதற்கட்டமாக தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் இந்தத் தடுப்பூசி முகாம் பிப்ரவரி மாதம் 6 -ஆம் தேதி முதல் 28 -ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதில், 9 மாதம் முதல் 15 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது.

Ø நாகையை அடுத்த நாகூரில் உள்ள பாதுஷா சாகிபு ஆண்டவர் தர்காவின் 460 -ஆம் ஆண்டு கந்தூரி விழா சந்தனக்கூடு ஊர்வலம், நடைபெற்றது.

Ø சென்னை துறைமுகத்துக்கு அருகே 2 கப்பல்கள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட எண்ணெய் கசிவு மிக மோசமான (தீவிரமான) விளைவுகளை ஏற்படுத்தும் என்று சென்னை ஐஐடி அறிக்கை தெரிவிக்கிறது. டாக்ஸிக் பாலி அரோமாடிக் ஹைட்ரோகார்பன் என்ற விஷத் தன்மை கொண்ட எண்ணெய் கடலில், கடற்கரையில், மீன்களில், கடல் ஆழத்தில் கலந்துள்ளது.

Ø உலக மகளிர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. முன்னிட்டு சென்னையிலிருந்து 2 ஏர் இந்தியா விமானங்களை முற்றிலும் பெண்கள் மட்டுமே கொண்ட குழு இயக்கியது. ஒரு விமானம் சென்னையிலிருந்து தில்லிக்கும், மற்றொரு விமானம் சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கும் இயக்கப்பட்டது.

Ø சென்னையில் இருந்து மானாமதுரை வழியாக அருப்புக்கோட்டை வரை இயக்கப்பட்ட சிலம்பு விரைவு ரயில் செங்கோட்டை வரை இயக்கப்படுகிறது.

Ø தமிழக உள்துறைச் செயலாளராக நிரஞ்சன் மார்டி மீண்டும் நியமிக்கப்பட்டார். கடந்த 2013-ஆம் ஆண்டு அவர் ஏற்கெனவே அந்தத் துறையின் செயலாளராகப் பொறுப்பு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Ø காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பட்டுப் பூங்காவுக்காக அடிக்கல்லை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி நாட்டினார்.

Ø தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

Ø திருவாரூர் சோமசுந்தரம் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

மனுநீதிச் சோழன் பற்றிய தகவல்கள்

சோழப் பெருமன்னர்களின் சிறப்புக்குரியத் திலகமாய் விளங்கி மனுநெறிப்படி வாழ்ந்து காட்டிய மன்னன் மனுநீதிச்சோழன். பசுவின் கன்றைக் கொன்ற மகன் வீதிவிடங்கனை, தேர்க்காலில் இட்டு கொன்று பசுவுக்கு நீதி வழங்கியதாக மனுநீதிச்சோழனைப் பற்றி இலக்கியங்கள் யாவும் விவரிக்கின்றன. திருவாரூர் தியாகராஜர் கோயிலின் 2-ம் பிரகாரத்தின் தென் புறச்சுவரில் கி.பி.1123-ம் ஆண்டு வெட்டப்பட்ட கல்வெட்டில் இலக்கியங்கள் மனுநீதிச் சோழனின் வரலாற்றை சொல்லுகின்றன.

***உள்ளூர் விமான போக்குவரத்து சந்தையில் இந்தியா மூன்றாமிடம் பெற்றுள்ளது.உள்ளூர் விமானச்சேவையை மக்கள் அதிகம் பயன்படுத்தி வருவதால் உலகளவில் இந்தியா 3ம் இடம் பெற்றுள்ளது. ஆசிய பசிபிக் விமான போக்குவரத்து மையம் வெளியிட்டுள்ள பட்டியலில் 2016ம் ஆண்டுக்கான சந்தையில் இந்தியா 100 மில்லியன் பயணிகளுடன் 3ம் இடமும், சீனா 490 மில்லியன் பயணிகளுடன் 2ம் இடமும், அமெரிக்கா 815 மில்லியன் பயணிகளுடன் முதலிடமும் பெற்றுள்ளது. ஜப்பானை பின்னுக்கு தள்ளி இந்தியா 3ம் இடம்பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

***தெலுங்கானா தொல்லியல் துறை நடத்திய அகழ்வாய்வில் உலகின் மிகப்பெரிய 'பெருஞ்சுவர்க் கல்' கிடைத்துள்ளது. தொல்லியல் ஆய்வுகளில் கீழடிக்கு அடுத்த சாதனையாக இந்தக் கண்டுபிடிப்பு அமைந்துள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தெலுங்கானா மாநிலத்தில் சித்திப்பெட் மாவட்டத்தின் நர்மதா என்னும் கிராமத்தில் நடந்த தொல்லியல் அகழ்வாய்வில் உலகின் மிகப்பெரிய 40 டன் எடையுள்ள 'பெருஞ்சுவர்க் கல்' ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மிகவும் தொன்மையான மனித நாகரிகம் உள்ளதாக நிகழ்த்தப்பட்ட ஆய்வில் ஓர் வரலாற்று உலக சாதனை நிகழ்ந்துள்ளதாகவே வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கண்டெடுக்கப்பட்ட கல் மற்றும் தொல்லியல் ஆய்வில் கிடைக்கப்பெற்ற பழமையான தொல்பொருள்களின் டி.என்.ஏ. ஆய்வு நடத்தப்பட்டப் பின்னர் அப்பகுதியின் பழமை, பரம்பரை, உணவு முறைகள், வாழ்க்கை முறை, அங்கு வாழ்ந்த மக்கள்தொகை எனப் பல வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப்படும் என தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

***ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு என்பது மிக முக்கியம். சாலை வசதி, ரயில் போக்குவரத்து வசதி, துறைமுக வசதி, மின்சாரம், தண்ணீர் என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாக இருந்தால்தான் தொழில்புரிவதற்கு எளிதாக இருக்கும். அந்நிய முதலீடும் அதிகமாக வரும். ஆசியாவில் உள்கட்டமைப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் நாடுகள் பட்டியல் சமீபத்தில் வெளியானது. இதில் சீனா முதலிடத்தை பிடித்துள்ளது. ஆசியாவின் மிகச் சிறிய பொருளாதாரத்தை கொண்ட நாடான வியட்நாம் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. மொத்த ஜிடிபியில் 6.8 சதவீதத்தை உள்கட்டமைப்புக்கு சீனா செலவிடுகிறது. மொத்த ஜிடிபியில் உள்கட்டமைப்புக்கு ஒதுக்கப்படும் நிதி (சதவீதத்தில்) 1. சீனா - 6.8 %. 2. வியட்நாம்- 5.7 % 3. இந்தியா- 5.4 % 4. இந்தோனேசியா- 2.6 % 5. மியான்மர்- 2.5 % 6. சிங்கப்பூர்- 2.3 % 7. பிலிப்பைன்ஸ்- 2.1% 8. மலேசியா- 1.9 %. 9. தாய்லாந்து- 1.7%

****சேதி தெரியுமா? - தமிழகத்துக்கு விஜய் ஹசாரே கோப்பை

தமிழ்நாடு கிரிக்கெட் அணி 2017-ம் ஆண்டுக்கான விஜய் ஹசாரே கோப்பையைக் கைப்பற்றியது. இந்தக் கோப்பையை ஐந்தாவது முறையாகத் தமிழகம் கைப்பற்றியிருக்கிறது. இதற்கு முன்னர் 2002-03, 2004-05, 2008-09, 2009-10 ஆகிய ஆண்டுகளிலும் தமிழக அணியே விஜய் ஹசாரே கோப்பையைத் தட்டிச் சென்றது. இறுதிப் போட்டி, டெல்லியில் உள்ள ஃபெரோஸ் ஷா கோட்லா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் வங்காள அணியை 37 ரன்கள் வித்தியாசத்தில் வென்று தமிழ்நாடு கோப்பையைத் தன்வசமாக்கியிருக்கிறது. முதலில் களமிறங்கிய தமிழ்நாடு அணி 217 ரன்களை எடுத்திருந்தது. 218 ரன்களை எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த வங்காள அணியை தமிழக அணி 180 ரன்களிலேயே சுருட்டிவிட்டது. இந்த ஆட்டத்தின் நாயகனாக தமிழக வீரர் கார்த்திக் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தியாவுக்கு 122-ம் இடம்

உலக மகிழ்ச்சி அறிக்கை 2017 என்னும் ஓர் அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சபை அமைப்பு, சர்வதேச மகிழ்ச்சி தினமாகக் கொண்டாடப்படும் மார்ச் 20 அன்று வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக 157 நாடுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்களிடையேயான சமத்துவம், ஆயுள் காலம், தனிநபர் வருமானம், வர்த்தகத்திலும் அரசியலிலும் ஊழலற்ற தன்மை போன்றவற்றின் அடிப்படையில் எந்த நாடு மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதைக் கணிப்பதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வின்படி உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இந்தியா 122-ம் இடத்தையே பிடித்திருக்கிறது. முதலிடத்தை நார்வே பிடித்துள்ளது. பெரும்பாலான தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் நிலைமை மோசமாகவே உள்ளது. பாகிஸ்தான் (80), நேபாளம் (99), பூடான் (97), வங்க தேசம் (117), இலங்கை (120) போன்ற நாடுகள் இந்தியாவைவிட மேம்பட்ட நிலையில் உள்ளன. இதற்கு முந்தைய ஆய்வின்போது, 118-ம் இடத்திலிருந்த இந்தியா இப்போது 122-ம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

சைகை மொழிக்கு ஓர் அகராதி

காது கேளாதோர், வாய் பேச இயலாதோர் ஆகியோருக்கான அகராதி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுவருகிறது. காது கேட்கும் திறனற்ற, வாய் பேச முடியாதவர்களிடையே தகவல் தொடர்பைப் பேணுவதற்காக இந்தியா முழுவதும் ஒரே விதமான சைகை மொழியை உருவாக்கும் எண்ணத்துடன் இந்த அகராதி தயாரிப்புப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த அகராதியானது அச்சு வடிவத்திலும், வீடியோ வடிவத்திலும் தயாராகிறது. இந்திய சைகை மொழிக்கான ஆய்வு மற்றும் பயிற்சி மையம் இந்த அகராதியை உருவாக்கிவருகிறது.

செவித் திறன் குறைபாடுள்ள 50 லட்சம் பேருக்கும், பேச்சுக் குறைபாடுள்ள 20 லட்சம் பேருக்கும் இந்த அகராதி பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரைவில் இந்த அகராதி பயன்பாட்டுக்கு வரும் எனத் தெரிகிறது. இதுவரை 6,000 -த்துக்கும் மேற்பட்ட இந்தி, ஆங்கிலச் சொற்களுக்கான சைகைக் குறிப்புகளை விளக்கும் சித்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

# ஹைதராபாத்தில் உள்ள "Osamania University" அடுத்த ஆண்டு நடைபெறும் 105வது இந்திய அறிவியல் மாநாட்டை(Indian Science Congress) நடத்த உள்ளது

# "Baruni திருவிழா": திரிபுரா மாநிலத்தில் நடந்து முடிந்துள்ளது

# Hong kongன் முதல் பெண் தலைவராக "Carrie Lam" தேர்வு செய்யப்பட்டுள்ளார்

# 3வது G20 கட்டமைப்பு ஒருங்கிணைப்பு மாநாடு வாரணாசியில் நடைபெற உள்ளது

- இம்மாநாடு ஜெர்மன் தலைமையிலும், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் துணை தொகுப்பாளராரகவும்(Co host) இணைந்து இம்மாநாட்டை நடத்துகிறது

# 32வது சந்தோஷ் கோப்பை கால்பந்து இறுதிப்போட்டியில் மேற்கு வங்காள அணி வெற்றி போற்று கோப்பையை கைப்பற்றியுள்ளது

# உள்நாட்டிலாயே தயாரிக்கப்பட்ட advanced light helicopterஆன "DHRUV"வை இலங்கை மற்றும் சில தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வழங்க இந்தியா பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது

# இந்தியாவின் எதிர் நீர்மூழ்கி போர்க்கப்பலான(Anti- submarine warfare) "Tupolev- 142M" மார்ச் 29 அன்று ஒய்வு பெற உள்ளது

# இந்தியாவில் நடைபெறும் மக்கள் போராட்டங்களில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது

- தமிழகத்தை தொடர்ந்து பஞ்சாப் இரண்டாவது இடத்தில் உள்ளது

# உச்ச நீதிமன்றம்:சமூக நலத்திட்டங்களுக்கு(Social welfare Schemes) ஆதார் அட்டையை கட்டாயப்படுத்த கூடாது என அரசுக்கு அறிவுரை

# CBFCஐ சீரமைக்க அமைக்கப்பட்ட "Sham Benegal" குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு பரிசிலித்து வருவதாக் மத்திய அமைச்சர் வெங்கயா நாயுடு தெரிவித்துள்ளார்

- CBFC- Central Board of Film Certification

# சிக்கிம் சட்டமன்றத்திற்கு மேலும் 5 பழங்குடியினர் இடங்களை ஒதுக்க பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்(National Commission for ST) ஒப்புதல் வழங்கியுள்ளது

# சர்வதேச சோலார் கூட்டமைப்பின்(ISA) இடைக்கால தலைமை இயக்குநராக "Upendra Tripathy" நியமிக்கப்பட்டுள்ளார்

- ISA- International Solar Alliance

# மாநில தொழிலாளர் காப்பீட்டு கழகத்தின் (ESIC) முதல் மொபைல் மருத்துவ சேவை ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் தொடங்கப்பட்டுள்ளது

- ESIC- Employee's State Insurance Corporation

# உத்திர பிரதேசத்தின் 4 நகரங்கள்(வாரணாசி,அயோத்தியா,மதுரா மற்றும் கோரக்பூர்) 24*7 மின்சார வசதி பெற உள்ளன.

- மேலும் பள்ளிகள்,கல்லூரிகள் மருத்துவமனைகள் மற்றும் அரசு கட்டிடங்களில் புகையிலை பொருட்கள் உபயோகிக்க அம்மாநில அரசு தடை விதித்துள்ளது

# இந்தியாவிலிருந்து நேபாளத்திற்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு பெட்ரோல் வழங்குவதற்கான புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது

# ஆஸ்திரியாவில் நடைபெற்ற "World Winter Games"ல் இந்தியா 37 தங்கம்,10 வெள்ளி மற்றும் 26 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது மொத்தம் 73 பதக்கம் வென்றுள்ளனர்

# உள்நாட்டு விமான போக்குவரத்தில்(Domestic Air Traffic) ஜப்பானை பின்னுக்கு தள்ளி இந்தியா மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது

# FIFA U-17 இறுதி போட்டியை கொல்கத்தாவில் உள்ள "Salt Lake Stadium"த்தில் நடக்க உள்ளது

- அரையிறுதி போட்டிகள் குஹாத்தியில் உள்ள இந்திரா காந்தி மைதானம் மற்றும் நேவி மும்பையில் உள்ள D Y Patil மைதானத்திலும் நடைபெறும்

- இந்தியாவில் மொத்தம் 6 நகரங்களில் FIFA U-17 போட்டிகள் நடைபெற உள்ளன

# ஆண்களுக்கான World League Final 2017(Hockey) மற்றும் World Cup Hockey 2018 இரண்டும் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடைபெற உள்ளது

# தெலுங்கானா மாநிலத்தில் உள்ள "Gangadevipalli" கிராமம் 100% கல்வியறிவு, 100% மது ஒழிப்பு,100% வீட்டு வரி செலுத்துதல், 100% பள்ளி செல்லும் குழந்தைகள்,100% கழிப்பறை வசதிகள் பெற்று சாதனை படைத்துள்ளது

- மேலும் இக்கிராமத்தில் உள்ள அனைத்து தெரு விளக்குகளும் "சூரிய ஒளியில்"(Solar power) இயங்க கூடியதாகும்

# 2020ல் உலகின் இளமையான நாடாக இந்தியா(India Will be the World's Youngest Country by 2020) 29 சராசரி வயதுடன் இருக்கும் என ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

- இவ்வறிக்கையினை "IRIS Knowledge Foundation நிறுவனம் "UN-HABITAT" உடன் இணைந்து வெளியிட்டுள்ளது

# மும்பையைச் சேர்ந்த "கௌரி சிங்" 36கிமீ நீளமுள்ள கடல் இணைப்பிலிருந்து இந்திய நுழைவுவாயில்(Sea Link to Gateway of India) வரை நீந்தி கடந்த இந்தியாவின் முதல் பெண்மனி என்ற பெருமையை பெற்றுள்ளார்

# AIIBல் புதிதாக 13 நாடுகளை சேர்க்க அவ்வமைப்பு அனுமதி வழங்கியுள்ளது

- கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இவ்வமைப்பில் 57 நாடுகள் இருந்தன

- தற்போது புதிதாக சேர்க்கப்பட உள்ள 13 நாடுகளுடன் சேர்த்து மொத்தம் 70 நாடுகள் இவ்வமைப்பில் உள்ளன

- AIIB- Asian Infrastructure InvDayment Bank

# மத்திய மறைமுக வரிகள் வாரியமான CBEC ஜீலை 1 முதல் CBIC என பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளது

- GST கொண்டு வருவதன் காரணமாக இம்மாற்றங்கள் கொண்டு வரப்படுகிறது

- CBEC- Central Board of Excise and Customs

- CBIC- Central Board of Indirect Taxes & Customs

# மனித ஆள்கடத்தலில்(Human Trafficking) மேற்கு வங்க மாநிலம் முதலிடத்தில் உள்ளது

- இராஜஸ்தான் இரண்டாவது இடத்தில் உள்ளது

# MARCH 27- World Theatre Day

***ஸ்பெயினில் ’ பாலியல் அமைச்சராக’ பெண் நியமனம்!

ஸ்பெயின் நாட்டில் மக்களின் இறப்புக்கு ஏற்ப குழந்தைகள் பிறப்பில் சமநிலை இல்லை. இதனால், மக்கள் தொகையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தில் பாலியல் அமைச்சராக, எடெல்மிரா பரெய்ரா என்ற ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார். இதை, அந்நாட்டு பிரதமர் மரியானோ ரஜாய் அறிவித்துள்ளார்.

***# Cyclone Debbie: சமீபத்தில் ஆஸ்திரேலியாவை தாக்கிய புயல்

# முதல் "Unity for Security" என்ற INTERPOL மாநாட்டை ஐக்கிய அரபு நாடுகள்(UAE) அபுதாபியில் நடத்த உள்ளது

- மேலும் "50mn Euros" INTERPOLக்கு அளிக்க உள்ளது

# தெலுங்கானா மாநில அரசு "Go Live" எனப்படும் குற்றவாளிகள் கண்டறியும் தொடர் அமைப்பை(Crime and Criminal Tracking Networking System) தொடங்கியுள்ளது

# இந்திய வம்சவாளியை சேர்ந்த "Vanita Gupta" அமெரிக்காவில் உள்ள "The Leadership Conference on Civil and Human Rights"ன் முதல் பெண் முதல் தலைமை அலுவலராக(CEO) நியமிக்கப்பட்டுள்ளார்

# இந்த வருட Formula1 சீசனின் முதல் போட்டியானா ஆஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸில் "Sebastian Vettel" (Ferrari) வெற்றி பெற்றுள்ளார்.

***தெலுங்கான மாநிலத்தின் வாரங்கல் மாவட்டத்தில் 360 குடும்கள், 1400 மக்கல் தொகை கொண்ட

#கங்கதேவிபள்ளி என்னும் சிரிய கிராமம்

● 100 % liquor prohibition, ● 100% house tax collection,

● 100% literacy, ● 100% school-going children, ● 100 % construction of toilets,

● 100% in small savings etc. வசதிகளை பெற்றுள்ளது.

அது மட்டும் அல்லாது அணைத்து தெறுவிழக்குகளும் சோலார் மையமாக்கப்பட்டளது.

கேமர வைத்து கண்கானிக்க படுகிரது.

Any time water - ATM machine வழியாக 20 litter water ரூ.1 க்கு வழங்கப்படுகிறது..

****#Gauri Singh : First Girl to Swim From Sea Link to Gateway of India

Gauri Singh, 14-year-old girl became the first girl to explore the route from Sea Link near Worli Koliwada to the Gateway of India. The 36 km long distance route, which she started on Sunday morning was completed in 6 hours and 30 minutes.

***India won 37 gold, 10 silver and 26 bronze medals and secured 5th position in the overall medal tally in the World Winter Games (held in Austria)

***ESIC launched India's first mobile clinic services in Andhra Pradesh and Telangana

****#பாஜக சட்டமன்ற உறுப்பினர் மைக்கேல் லோபோ கோவா சட்டசபை துணை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

#தேசிய ஹெலிகாப்டர் ஆபரேட்டர் நிறுவனம் பவன் ஹன்ஸ், 1 ஏப்ரல் 2017 முதல் "தில்லி தர்ஷன் Ride's "எனும் புதிய சேவையை துவக்க உள்ளது.

#யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் தற்காலிக பட்டியலில் இந்திய நகரங்களாகிய( அகமதாபாத்,தில்லி,ஜெய்ப்பூர்,புவனேஸ்வர்,மும்பை)சேர்க்கப்பட்டுள்ளது.

# சமுதாய மற்றும் கல்விதரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான தேசிய ஆணையம்(National Conmission for Socially and Educationally Backward Classes- NSEBC) அமைக்க மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது

- இந்த ஆணையம் மத்திய சமுகநீதி மற்றும் அதிகாரமளித்தல்(Ministry of Social justice and Empowerment) துறையின் கீழ் உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கான ஆணையத்திற்கு(National Commission for Backward Classes) மாற்றாக வர உள்ளது

- மேலும் புதிதாக வர உள்ள NSEBC ஆணையம் அரசியலைமைப்பு சார்ந்த அமைப்பாக(Constitutional Body) உருவாக்க சரத்து 338B என்ற புதிய சரத்து உருவாக்கப்பட உள்ளது

குறிப்பு: Art-338- National Commission For SC

- Art 338A- National Commission for ST

# 6வது தேசிய போட்டோகிராபி விருதுகளில் "Raghu Rai" என்பவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது

# 2017ம் ஆண்டிற்கான "Earth hour" நேற்று(மார்ச் 25) இரவு 8.30மணி முதல் 9.30 வரை கடைபிடிக்கப்பட்து

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை "Earth hour" புவி வெப்பமயமாதலை தடுக்க அனுசரிக்கப்படும்

# அண்டார்டிகாவில் உள்ள பனிபாறைகளின் மேற்புற திசைவேகத்தை(Surface Velocity) அறிய அங்கு பொருத்தப்பட்டுள்ள DGPSல் மின்தரவுகளை(Stakes) பொருத்த ISRO 4 குழுக்களை அனுப்பியுள்ளது

- இந்த குழுக்கள் அண்டார்டிகாவில் உள்ள இந்திய ஆராய்ச்சி மையங்களான "Bharathi மற்றும் Maitri"ல் இந்த புதிய மின்தரவுகள பொருத்தும்

- DGPS- Differential Global Positioning System

# 2017ம் ஆண்டிற்கான " Abel Prize" பிரென்ச் கணித மேதை "Yves Meyer" க்கு வழங்கப்பட்டுள்ளது

# பாகிஸ்தான் தினத்தை முன்னிட்டு முதன் முறையாக சீனா,சவுதி மற்றும் துருக்கி படைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெறும் அணிவகுப்பில் பங்கேற்க உள்ளன

# எவரெஸ்ட் செல்லும் Indian Navyன் இரண்டாவது பயணம் தொடங்கியது

# தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தின்(National Dairy Development Board) 50வது ஆண்டு விழாவை முன்னிட்டு "50 years- The great Indian Milk Reveloution" என்ற புத்தகத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் வெளியிட்டுள்ளார்

# உலகின் மிகப்பெரிய செயற்கை சூரிய அமைப்பு(Artificial sun set) ஜெர்மனியின் Cologneல் உருவாக்கப்பட்டுள்ளது

- கார்பன் பயன்பாடு(Carbon-Neutral) இல்லாமல் ஹைட்ரஜன் தயாரிக்க இந்த செயற்கை சூரிய அமைப்பு பயன்படும்

# 67% திறம்பட செயல்படும் புதிய வகை ரோட்டோ வைரஸ் மருந்தினை ஆப்ரிக்க நாடானா "Niger"ல் சோதனை முறையில் அறிமுகப்படுத்தியுள்ளனர்

- இந்த மருந்திற்கு "BRV-PV" என பெயரிட்டுள்ளனர்

- இதனை "Serum Institute of India" நிறுவனம் உருவாக்கியுள்ளது

# ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் உள்ள "Bakshi கால்பந்து மைதானம்" FIFA விதிமுறைகளுக்கு உட்பட்டு புதிதாக மேம்படுத்தப்பட உள்ளது

# கர்நாடகவின் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீரை சேமித்தல் மற்றும் அதனை திறம்பட செலவழித்தல் தொடர்பான குறைந்த விலை தொழில்நுட்பங்களுக்கு "NABARD" வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது

# "Rashtriya Vasoshri Yojana"

- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மூத்த குடிமகன்களுக்கு வாழ்வதற்கு தேவையான உபகரணங்கள் உடற்சார்ந்த உதவிப்பொருட்கள் லழங்கும் மத்திய அரசின் திட்டம் எப்ரல் 1,2017 முதல் தொடங்கப்பட உள்ளது

- ஆந்திர மாநிலம் நெல்லூரில் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது

# புலம் பெயர்ந்தோருக்கு அமெரிக்காவில் வழங்கப்படும் உயரிய குடிமகன் விருதான "Ellis Island Medal of Honour" ற்கு இந்தியாவில் இருந்து 6 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்

# விமானம்தாங்கி கப்பலான "INS Vikramaditya" கப்பலில் இருந்து பாரக் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது

- Barak ஏவுகணை ஒரு தரையிலிருந்து வான்வெளியில்(Surface-to-air) தாக்கும் ஏவுகணையாகும்

# ஆசிய வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின்(Asian Development Research Institute) வெள்ளி விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக "பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநாடு"(Conference on Bihar and Jharkhand) பாட்னாவில் நடைபெற்றது

- இதனை குடியரசுத் த்லைவர் ப்ராணப் முகர்ஜி தொடங்கி வைத்து பேசினார்

- இம்மாநாட்டின் கரு(Theme): "Shared History to Shared Vision"

# மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு துறையின்(Ministry of Environment and Climate Change-MoEF) கீழ் செயல்படும் சட்டப்பூர்வ அந்தஸ்து பெற்ற "இந்திய விலங்குகள் நல வாரியம்" (AWBI)தற்போது ஜல்லிக்கட்டு போரட்டங்களுக்கு பின் மூத்த MoEF அதிகாரியின் கீழ் செயல்பட உள்ளது

- AWBI- Animal Welfare Board Of India

# The National Helicopter Operator Pawn நிறுவனம் "DELHI DARSHAN RIDES" என்ற புதிய சேவையை தொடங்கியுள்ளது

- இதில் 2500 ரூபாயிலிருந்து சேவைகள் தொடங்கப்படும்

# ஆந்திரா: Jan dhan  வங்கி கணக்குகளை ஆதார் அட்டையுடன் அதிகமாக இணைத்த மாநிலமாக உள்ளது

# பசுந்தீவனங்களை காற்று புகாமல் பாதுகாக்கும் 10MT(Megaton) அளவிலான அமைப்புகளை(Silos) 2019-20 இறுதிக்குள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

# "Tanushree Pareek": 51 ஆண்டு BSF வரலாற்றில் முதல் பெண் போர் அதிகாரி(Combat Officier) என்ற பெருமையை பெற்றுள்ளார்

# March 25- International Day of Remembrance of the Victims of Slavery and the Transatlantic Slave Trade

# MARCH 25- International Day of Solidarity with Detained and Missing Staff Members

# MARCH 26- Independence Day and National Day of BangladeshBangladesh

***“மன அழுத்தத்தில் தற்கொலைக்கு முயன்றால் குற்றம் ஆகாது” என்பது குறித்து பாராளுமன்றத்தில் மனநல சுகாதார பாதுகாப்பு மசோதா நிறைவேறியுள்ளது.

ஹாங்காங்கின் தலைமை நிர்வாகியாக சீன ஆதரவாளர் கேரி லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.ஹாங்காங்கின் தலைமை நிர்வாகியாக ஒரு பெண் பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.

டெஸ்ட் அணிகளுக்கான சர்வதேச கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் எந்த அணி முதலிடத்தில் இருக்கிறதோ, அந்த அணிக்கு ஐ.சி.சி டெஸ்ட் சாம்பியன் எனும் அந்தஸ்து மற்றும் கதாயுதம் பரிசாக வழங்கப்படும்

.அவ்வகையில் இந்த ஆண்டுக்கான ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்த இந்திய அணிக்கு 1 மில்லியன் டாலர்களுக்கான காசோலை மற்றும் கதாயுதத்தை கவஸ்கரால், கேப்டன் விராட் கோலியிடம் வழங்கப்பட்டுள்ளது.

நடுவரை அவமதிக்கும் வகையில் பேசியதற்காக, பார்சிலோனா வீரர் மெஸ்சிக்கு உலகக் கோப்பை தகுதிச்சுற்றின் 4 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர் தற்போது அர்ஜென்டினா அணிக்காக உலகக் கோப்பை தகுதிச்சுற்று ஆட்டங்களில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

***தேடுபெறி நிறுவனமான கூகுள் தனது அறிவுசார் வரைபடத்தில் ( Google Knowledge Graph) புதிதாக பெங்காலி மொழியில் தேடும் வசதியை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது

நாளந்தா பல்கலைகழகத்தின் புதிய துணைவேந்தராக சுனைனா சிங் நியமனம்

லிஸ்பன் உடன்படிக்கை விதி எண் 50ன் படி ஐரோப்பிய ஒன்றியத்தியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதை அந்நாடு உறுதிபடுத்தியுள்ளது.

மேலும் விதி எண் 50ஐ முதன்முதலாக பயன்படுத்தும் நாடு பிரிட்டன்

இந்தியாவில் அதிவேக இணைய சேவையை பெறும் முதல் நகரம் ஹைதராபாத் ஆகும்

இந்தியாவில் முதன்முறையாக அறுவைச்சிகிச்சையில் ஏற்படும் குறைபாடுகளை தவிர்க்க ரோபோட்டிக் எந்திரகங்ள் பயன்படுத்தும் உபகரணங்கள் வழியான மருத்துவ சிகிச்சை முறை ஜிப்மர்மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது

மடெய்ரா தீவில் அமைந்திருக்கும் விமான நிலையத்திற்கு கால்பந்து வீரர் கிறிஸ்டியன் ரொனால்டோவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது

உலக சுகாதார நிறுவனத்தின் சர்வதேச மருத்துவ மாநாடு தில்லியில் துவங்க உள்ளது.

உலக சுகாதார தினம் = ஏப்ரல் 7.  மையக்கருத்து=மன அழுத்தம்

# "Sarhul": பழங்குடியினர் திருவிழா ஜார்கண்ட் மாநிலத்தில் தொடங்கியுள்ளது

# அமெரிக்க விண்வெளி வீரங்கானை "Peggy Whiston" விண்வெளியில் அதிக நடைபயணம்(Space walks) மேற்கொண்ட பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்

# Netherland நாட்டின் உதவியுடன் "பூக்களுக்கான சிறப்பு மையம்"(Centre of Excellence for flowers) ஹரியானா மாநிலம் "Jhajjar"ல் தொடங்கப்பட உள்ளது

- விவசாயிகளை பூ வளர்ப்பில் (Floriculture) ஊக்குவிக்க இம்மையம் அமைக்கப்படுகிறது

# "Six Time Thinner" என்ற புத்தகத்தை "Babar Afzal" எழுதியுள்ளார்

- இதனை ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநர் "NN Vohra" வெளியிட்டுள்ளார்.

# இந்திய கப்பற்படையில் பருவநிலை கண்காணிக்கும் புதிய வானிலையியல் ஆய்வு மையம் "IAAMS" அரக்கோணத்தில் உள்ள "INS Rajali" கடற்படை விமான தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது

- IAAMS- Integrated Automatic Aviation Meteorological Systems

# UNவைச் சேர்ந்த உலக உணவு திட்ட அமைப்பின்(WFP) புதிய செயல் இயக்குநராக "David Beasley" நியமிக்கப்பட்டுள்ளார்

- WFP- World Food Programme

# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஷ் அமைச்சர் "Priti Patel" இந்த ஆண்டிற்கான "Pravasi Bharathiya Samman Award"ற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்

# மத்திய அரசு சணல் மற்றும் பருப்பு வகைகளுக்கு(Wheat and Turdal) 10% ஏற்றுமதி வரியை திணித்துள்ளது

# "Montenegro": NATO அமைப்பில் சேர உள்ள 29வது நாடு

# இந்திய இராணுவத்தில் உள்ள "Rashtriya Rifles" படைப்பிரிவைப் பற்றி "Home of The Brave" என்ற புத்தகத்தை "Nitin A Gokhale" எழுதி வெளியுட்டுள்ளார்

# இந்திய விளம்பரபடுத்துதல் நிலை குழுவின்(ASCI) ஒரே உறுப்பினராக "Paytm" நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது

- ASCI- Advertising Standards Council of India

# உத்ரகாண்ட் மாநிலத்தில் 4 மாதங்களுக்கு சுரங்கத் தொழிலுக்கு(Mining) முற்றிலும் தடை விதித்து அம்மாநில உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

# "Odisha": வங்கிகள் இல்லாத இடங்களுக்கு சுய உதவிக் குழுக்கள்(Self Help Groups) மூலம் வங்கிச் சேவையை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக உள்ளது

# 2014,2015 மற்றும் 2016ம் ஆண்டிற்கான "Dr.B.C.Roy National Award" மற்றும் 2008,2009,2010,2014,2015 மற்றும் 2016ம் ஆண்டிற்கான "Hari Om Ashram Alembic Research Award"களை குடியரசுத் தலைவர் ப்ரணாப் முகர்ஜி வழங்கினார்

- இவ்விரண்டு விருதுகளும் "மருத்துவ துறையில்"(Medical Field) சிறந்து விளங்குபர்களுக்கு வழங்கும் விருதாகும்

# National Tribal and North East Comclave 2017 புதுடெல்லியில் நடந்து முடிந்தது

- இதனை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் "லலித் கலா அகாதாமி"(Lalit Kala Akademi)ல் நடத்தப்பட்டது

# இந்த ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ள "FIFA U-17" போட்டிகளுக்காக இந்தியாவில் கால்பந்தை பிரபலப்படுத்த தொடங்கப்பட்ட "Mission XI Million Programme" திட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கால்பந்து விளையாடும் நிகழ்ச்சியை சபாநாயகர் "Sumitra Mahajan" தொடங்கி வைத்தார்

# தமிழ்நாடு கிரிக்கெட் அணி "Deodhar Trophy"ஐ வென்றுள்ளது

- இதன் மூலம் உள்ளூரில் நடக்கும் ரஞ்சி, இரானி, விஜய் ஹசாரே, சயத் முஷ்டாக் , தியோதர் ஆகிய கோப்பைகளை வென்றுள்ள முதல் மாநில அணி என்ற பெருமை தமிழகத்திற்கு கிடைத்துள்ளது..

# கேரள மாநில அரசின் புதிய தலைமை செயலராக(Chief Secretary) "Nalini Netto" நியமிக்கப்பட்டுள்ளார்

- இவர் தமிழக தலைமை செயலர் "Girija Vaidyanathan"ன் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது

# INS Rajaliன் வெள்ளி விழா ஆண்டு நிகழ்ச்சி அரக்கோணத்தில் உள்ள கப்பற்படை விமான தளத்தில் கொண்டாடப்பட்டது

# மின் உற்பத்தியில் நிகர இறக்குமதியளாராக இருந்த இந்தியா முதன் முறையாக நிகர ஏற்றுமதியளாராகியுள்ளது(1st time India has turned around from a net importer of electricity to Net Exporter of electricity)

- இதனை மத்திய மின்சார வாரியம் அறிவித்துள்ளது

# எப்ரல் 1 முதல் BS-III(Bharath Stage-3) வாகனங்களை விற்க உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது

- மேலும் கனரக தொழிற்சாலை நிறுவனளை விட மக்கள் நலனே முக்கியம் என கூறியுள்ளது

# இந்திய இராணுவத்தின் தலைமை தளபதி "Bipin Rawat" நேபாள நாட்டின் உயரிய இராணுவ கௌரவமான "Honorary General Of Nepalese Army" என்ற கௌரவத்தை பெற்றுள்ளார்

# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த "Gurinder Chandha" 2017ம் ஆண்டிற்கான "Sikh Jewel Award"ற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்

# நீர்த் துறையில் இணைந்து செயல்பட ஏதுவான இடங்களை கண்டறிய இந்தியா மற்றும் "Bavaria"ம் இணைந்து குழு ஒன்றை அமைத்துள்ளனர்

# பிரபல இந்தி நடிகர் "Anupam Kher" இந்த ஆண்டிற்கான கலா ரத்தன் விருதை(Kala Ratan Award) பெற்றுள்ளார்

# ஒருங்கிணைந்த கட்டணங்களை செலுத்துவதை எளிமையாக்க ICICI வங்கி "Truecaller" உடன் இணைந்து செயல்பட உள்ளது

# உலகின் முதல் "Nanocar Race" பிரான்சில் அடுத்த மாதம் தொடங்க உள்ளது

# அமெரிக்கவைச் சேர்ந்த "The Atlantic Council"ன் ஆலோசனை குழுவில் "Anil Ambani" சேர்க்கப்பட்டுள்ளார்

# "Sima Kamil": பாகிஸ்தானில் வங்கிக்கு தலைமை ஏற்கும் முதல் பெண்மணி

- பாகிஸ்தானில் உள்ள "United Bank Limited"ன் தலைவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.இதன் மூலம் பாகிஸ்தானில் உள்ள

வணிக வங்கிக்கு தலைமையற்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்

# "Brazil": 2018ம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் உலக கோப்பை கால்பந்து போட்டிகளுக்கு தகுதி பெற்ற முதல் நாடு

- மேலும் நட்சத்திர வீரர் "Lionel Messi"க்கு 4 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதால் அர்ஜென்டினா அணி தகுதி பெறுவது கேள்விக் குறியாகியுள்ளது

# 2000 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த அரண்மனை "Mexico"வில் கண்டறியப்பட்டுள்ளது.

***ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதில் தமிழகம் 4ம் இடம்: வெங்கையா!

வெங்கையா நாயுடு கூறியதாவது:

நகர்ப்புற ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில் தமிழகம் 4-வது இடம் பெற்றுள்ளது.

குஜராத், ராஜஸ்தான், கர்நாடகா மாநிலங்கள் முதல் 3 இடங்களை பிடித்துள்ளது.

மேலும் நகர்ப்புற ஏழை மக்களுக்கு தமிழக அரசு இதுவரை 6,940 வீடுகள் கட்டித் தந்துள்ளது.

***கோலிக்கு "பத்ம ஸ்ரீ" விருது வழங்கினார் பிரணாப்!

டெல்லியில் பத்ம விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி விருதுகளை வழங்குகிறார்.

கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கு பத்ம ஸ்ரீ விருதை பிரணாப் வழங்கினார்.

சேகர் நாயக் மற்றும் தீபா மாலிக் ஆகியோருக்கும் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

***ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிப்பதில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க. ஸ்மார்ட் ரேஷன் கார்டு முறையை செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக திருவள்ளூர் மாவட்டம் கொரட்டூரில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

***Shanti Prayas-II. அமெரிக்காவும் நேபாளும் இணைந்து நடத்தும் கூட்டு ராணுவ பயிற்ச்சி

*****அமெரிக்காவில் உள்ள சிறுமகாணமான EL SALVADOR என்ற பகுதி தனிமம்& சுரங்கத்தொழிலுக்கு முற்றிலும் தடைவிதித்துள்து

முன்னதாக இந்தியாவில் உத்ரகாண்ட் மாநில அரசு 4மாநிலங்களுக்கு சுரங்க தொழிலுக்கு தடை விதித்துள்ளது

திருப்பதி கோயிலின் வரலாறு, விழாக்கள் போன்ற சிறப்புகளையும் தொகுத்து Inside Tirumala Tirupati என்ற ஆவணப்படத்தை நேஷனல் ஜியாகிரஃபி தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது

மேலும் உகாதி திருநாளில் கோவிந்தா திருமலை தேவஸ்தானம் என்ற புதிய மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது

பசுவைக் கொல்பவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கும் வகையில் குஜராத் சட்டமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

20 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட பகுதியில் இந்த 220 மீட்டருக்குள் உள்ள மதுகடைகளை மூடும்படி புதிய உத்தரவைப் உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ளது(முன்னதாக 500மீ)

குவாலியர் மகாராணி விஜய ராஜே சிந்தியாவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து கோவா கவர்னர் மிருதுளா சின்ஹா எழுதிய நூல் = ராஜபாதையில் இருந்து மக்கள் மன்றம் நோக்கி ( Rajpath Se Lok PathPar )

**சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக "இந்திரா பானர்ஜி" நியமனம்.

- இந்திரா பானர்ஜி தற்போது டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.

- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகிக்கவுள்ள 2-வது பெண் நீதிபதி இந்திரா பானர்ஜி..

****கர்நாடக மாநிலத்தில் உள்ள உணவகத்தின் பெயரான நம்ம உணவகம் என்னும் பெயரை இந்திரா உணவகம் என அம்மாநில அரசு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

மத்திய பிரதேச மாநில அரசின் சாலை போக்குவரத்தினை மேம்படுத்த இந்தியா புதிய வளர்ச்சி வங்கியுடன் ( $350 million ) ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

****குஜராத் மாநிலத்தில் பசுவதை செய்பவர்கள், மாட்டிறைச்சி விற்பவர்கள், இறைச்சிக்காக மாடுகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு செல்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வழி செய்யும் சட்ட மசோதா

நிறைவேற்றப்பட்டது. இதற்காக குஜராத் கால்நடைகள் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி, பசுவதை செய்பவருக்கு 7 ஆண்டு வரை சிறைத் தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த சட்டமசோதாவில், "பசுவதை செய்பவர்கள், மாட்டிறைச்சி விற்பவர்கள், இறைச்சிக்காக மாடுகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு செல்பவர்களுக்கு 7 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படும். ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்" என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. இதேபோல், இறைச்சிக்காக மாடுகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு செல்லும் வாகனங்களை அரசு பறிமுதல் செய்யவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

***"டாக்டர் பிசி ராய் விருதுகள்_2017

1] கீதாலக்சுமி 2] பழனி வேலு 3] ஆனந்த் கேஹ்ஹர்

2017_பத்மவிபூஷன் விருது

1]. முரளிமனோகர் ஜோசி 2]. தேவிபிரசாத் திவேதி

பத்மஸ்ரீ விருதுகள்

1]. விராத் கோஹ்லி 2]. தீபா மாலிக் 3]. தீபா கர்மாகர் 4]. சாக்ஷி மலிக் 5]. சேகர் நாயக் 6]. அனுராதா பட்வால்

****'நிசார்' எனும் நுண்துளை ரேடார் செயற்கைக்கோளை உருவாக்கி வருகிறது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ.

அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனத்துடன் இதை இஸ்ரோ உருவாக்கி வருகிறது.

வேளாண்மை, காலநிலை மாற்றம் உள்ளிட்ட ஆராய்ச்சிகளுக்காகத் தயாரிக்கப்பட்டு வருகிறது 'நிசார்'!

****பாகிஸ்தானின் முதல் நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி ஆப்தஸ் சலாமின் உறவினர் லாகூரில் சுட்டுக் கொல்லப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரபல வழக்கறிஞரான மாலிக் சலீம் லத்தீப், இவரது மகனும் வழக்கறிஞருமான ஃபர்ஹான் ஆகியோர் நன்கனா சாஹிப் நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர் இருவர் மீதும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மாலிக் சலீம் லத்தீப் அந்த இடத்திலேயே பலியானார், மகன் ஃபர்ஹான் பலத்த துப்பாக்கி காயங்களுடன் மருத்துவமனையில் ஆபத்துக் கட்டத்தை தாண்டாத நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அகமதி சிறுபான்மையினர் பிரச்சினை இந்திய-பாகிஸ்தான் பிரிவினை காலத்திலிருந்தே பாகிஸ்தானில் நீடித்து வரும் ஒரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

****பயங்கரப் புயல் டெபியின் கோரத்தாண்டவத்தினால் வடக்கு ஆஸ்திரேலியாவின் நகர்கள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன. குவீன்ஸ்லாந்து கடற்கரைப் பகுதிகளை புரட்டிப் போட்டு விட்டுச் சென்ற டெபி புயல் காற்றால் அப்பகுதி போர்க்களம் போல் காட்சியளிப்பதாக ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. குவீன்ஸ்லாந்து மாகாணத்தின் போவென் மற்றும் ஏர்லி பகுதிக்கு இடையே நேற்று டெபி புயல் கரையைக் கடந்தது. இதனால் மணிக்கு 270 கிமீ காற்று, கனமழை தாக்கியது, காற்றில் கட்டிடக் கூரைகள் பிய்த்துக் கொண்டு பறந்தன. இதுவரை இல்லாத, வரலாறு காணாத அளவுக்கு 48 மணி நேரத்தில் 1,000மிமீ மழை (39 இஞ்ச்) இப்பகுதிகளை மூழ்கடித்துள்ளது, அதாவது 6 மாதங்களில் பெய்ய வேண்டிய மழை 48 மணி நேரத்தில் கொட்டித்தீர்த்துள்ளது.

****ஐரோப்பிய யூனியனிலிருந்து முறைப்படி பிரிட்டன் வெளியேறுவது (பிரெக்சிட்) தொடர்பான அறிவிக்கையில் அந்நாட்டு பிரதமர் தெரசா மே கையெழுத்திட்டார். இந்தக் கடிதத்தை பிரஸ்ஸல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியன் கவுன்சில் தலைவர் டொனால்டு டஸ்க்கிடம் பிரிட்டன் தூதர் சர் டிம் பரோ வழங்கினார்.

ஐரோப்பிய யூனியனில் 28 நாடுகள் உறுப்பினராக உள்ளன. இந்த உறுப்பு நாடுகள் கூட்டாக இணைந்து செயல்படுவதற்காக லிஸ்பன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் 50-வது பிரிவின் கீழ், மற்ற உறுப்பு நாடுகளுக்கு பிரிட்டன் இந்த அறிவிக்கையை வழங்கி உள்ளது.

இதன்படி, அடுத்த 2 ஆண்டுகளுக்கு பேச்சுவார்த்தை நடைபெறும். அப்போது, வரும் காலத்தில் யூனியனுடன் உறுப்பினர் அல்லாத நாடு என்ற வகையில் பிரிட்டன் எத்தகைய உறவை கடைபிடிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்படும். இதன்படி வரும் 2019-ம் ஆண்டு மார்ச் 29-ம் தேதி பிரிட்டன் முறைப்படி வெளியேறும். ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிப்பதால் பிரிட்டனில் உள்நாட்டு மக்களுக்கு வர்த்தகம் மற்றும் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து, யூனியனிலிருந்து வெளியேற முடிவு செய்த பிரிட்டன் பொதுமக்களிடம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் வாக்கெடுப்பு நடத்தியது. இதில் பெரும்பாலான மக்கள் வெளியேற விருப்பம் தெரிவித்தனர். இதன்படி, யூனியனிலிருந்து வெளியேற பிரிட்டன் முடிவு செய்தது. இதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் சமீபத்தில் ஒப்புதல் வழங்கியது.

****அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் ஜெப் பியோஸ் சர்வதேச பணக் காரர்கள் பட்டியலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். இரண்டாவது இடத்திலிருந்த வாரன் பபெட் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறார்.

துபாயை சேர்ந்த இ-காமர்ஸ் நிறுவனமான Souq.com. நிறு வனத்தை வாங்குவதாக அமேசான் அறிவித்திருக்கிறது. எவ்வளவு தொகைக்கு வாங்கியது என்னும் தகவல் வெளியிடப்படவில்லை. ஆப்பிள் நிறுவனத்துக்கு பிறகு ஐக்கிய

அமீரகத்துக்கு செல்லும் இரண்டாவது அமெரிக்க நிறுவனம் அமேசான் ஆகும். இதனால் அமேசான் பங்குகள் 18.32 டாலர் உயர்ந்தது. இதனால் ஒரே நாளில் பியோஸ் சொத்து மதிப்பு 150 கோடி டாலர் உயர்ந்திருக்கிறது. புளூம்பெர்க் குறியீட்டின்படி இவரது தற்போதைய சொத்து மதிப்பு 7,560 கோடி டாலர் ஆகும். இந்த ஆண்டில் மட்டும் 1,070 கோடி டாலர் அளவுக்கு இவரது சொத்து மதிப்பு உயர்ந்திருக்கிறது. மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறார். இவரது சொத்து மதிப்பு 8,600 கோடி டாலர்கள். 7,490 கோடி டாலர் சொத்துகளுடன் பெர்க் ஷயர் நிறுவனத்தின் வாரன் பபெட் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். ஸ்பெயின் நாட்டை சேர்ந்த அமான்சியோ ஒர்டேகா 7,420 கோடி டாலர் சொத்துகளுடன் நான்காவது இடத்திலும், பேஸ்புக் நிறுவனத்தின் நிறுவனர் மார்க் ஜூகர்பெர்க் 6,140 கோடி டாலர் சொத்துகளுடன் ஐந்தாவது இடத்திலும் இருக்கின்றனர்.

****இணைய சேவை வழங்கும் நிறுவன மான ஏசிடி ஒரு ஜிபிபிஎஸ் வேகத் திலான இணைய சேவையை நேற்று ஹைதராபாத்தில் அறிமுகம் செய்தது. இந்தியாவில் இந்த சேவையை அறிமுகம் செய்யும் முதலாவது நிறு வனம் ஏசிடி ஆகும். மேலும் விரை வில் 11 இந்திய நகரங்களில் இந்த சேவை அறிமுகம் செய்யப்பட ும் என ஏசிடி நிறுவனத்தின் சி இஓ பாலா மல்லாடி தெரிவித்தார். உலகத்தில் வெகு சில நகரங்களில் மட்டுமே ஜிபிபிஎஸ் வேகம் இருக்கிறது. பென் டிரை வில் இருந்து தகவல் மாறுவதற்கு ஆகும் நேரத்தை விட இணையத்தில் வேகமான தரவிறக்கம் செய்ய முடியும். இந்தியாவின் சராசரி இணைய வேகம் 2 எம்பிபிஎஸ் ஆகும். சராசரியை விட 400 மடங்கு வேகத்தில் ஏசிடி இயங்கும் என கூறினார்.

****செயில் நிறுவனத்தின் மூன்று துணை நிறுவனங்களின் பங்கு களை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக நேற்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், செயில் நிறுவனத்தின் துணை நிறுவனங்களான துர்காபூரில் உள்ள அலாய் எஃக ு உருக்காலை, சேலம் மற்றும் பத்ராவதி எஃகு உருக்காலைகளின் பங்குகளை தனியாருக்கு விற்பதற்கு மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த துணை நிறுவனங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்று கூறியுள்ளது. செயின் நிறுவனத்தின் ஐந்து பெரிய ஆலைகளான பிலாய், பொக்காரோ, ரூர்கேலா, துர்காபூர் மற்றும் பரன்பூர் ஆலைகள், சேலத்தில் உள்ள சிறப்பு எஃகு உருக்காலை ஆகியவற்றில் ஒரே சமயத்தில் மிகப் பெரிய அளவில் விரிவாக்கத் திட்டத்தினை மேற் கொள்ள இருப்பதாக கூறப்பட் டுள்ளது.

****நாடு முழுவதும் 80 ஆயிரம் கிராமபஞ்சாயத்துக்களுக்கு பிராட்பேண்ட் வசதி ஏற்படுத்தி கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த வசதி பாரத் நெட் திட்டத்தின் படி செயல்படுத்தப்படுகிறது. ஒரு லட்சம் கிராம பஞ்சாயத்துக்களுக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டு முதலில் 80 ஆயிரம் கிராம பஞ்சாயத்துக்குகளுக்கு இவ்வசதி ஏற்படுத்தி தரப்பட உள்ளதாக மத்திய தகவல் தொடர்பு துறை அமைச்சர் மனோஜ் சின்ஹா ராஜ்யசபாவில் இன்று (மார்ச்-31) தெரிவித்தார்.

****அலகாபாத் ஐகோர்ட் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று உரையாற்றுகிறார். உத்திரபிரதேச மாநிலம் அலகாபாத் ஐகோர்ட்டின் 150வது ஆண்டு விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏப். 2-ம் தேதி நடக்க உள்ள விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

****சர்வதேச_ஆண்டுகள்

1968 - சர்வதேச மனித உரிமை ஆண்டு. 1970 - சர்வதேச கல்வி ஆண்டு.

1974 - சர்வதேச மக்கள்தொகை ஆண்டு. 1978 - சர்வதேச பெண்கள் ஆண்டு.

1979 - சர்வதேச குழந்தைகள் ஆண்டு. 1985 - சர்வதேச இளைஞர் ஆண்டு.

1986 - சர்வதேச அமைதி ஆண்டு. 1994 - சர்வதேச குடும்ப ஆண்டு.

1996 - சர்வதேச ஏழ்மை ஒழிப்பு ஆண்டு. 2003 - சர்வதேச நன்நீர் ஆண்டு.

2004 - சர்வதேச அரிசி ஆண்டு. 2005 - சர்வதேச இயற்பியல் ஆண்டு.

2006 - சர்வதேச பாலைவன ஆண்டு. 2007 - சர்வதேச துருவ ஆண்டு.

2008 - சர்வதேச சுகாதாரம்/உருளைக்கிழங்கு/மொழிகள் ஆண்டு.

2009 - சர்வதேச வானியல் ஆண்டு.

2010 - சர்வதேச நுரையீரல்/ உயிரினம் ஆண்டு./ 2010-2011 - அனைத்துலக இளைஞர் ஆண்டு

2013 - சர்வதேச தண்ணீர் ஒத்துழைப்பு ஆண்டு, சர்வதேச தினை ஆண்டு.

2014 - சர்வதேச குடும்ப விவசாய ஆண்டு.

2015 - சர்வதேச ஒளிவருடம் (Year of Light) , சர்வதேச மண்வருடம் (Year of Soil)

2016 - சர்வதேச பருப்பு ஆண்டு.